உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 34 | இராக்ஷச – ஆடி – 10—8—75 | இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால் வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## சுதந்திர நாடும் மக்களும்

மக்களாக உள்ள எல்லோரும் சுதந்திரமாகவே வாழ விரும்புகிறார்கள். அதிலும், பூரண சுதந்திரம் பெறவேண்டுமென்றே பாடுபடுகிறார்கள். அதில் வெற்றியும் பெற்று வருகிறார்கள். முன்பு ஒருசில ஆண்டுகளுக்குமுன்னே அந்நியர் ஆட்சியில் சிக்கியிருந்த நாடுகள் பலவும் இப்போது சுதந்திரம் பெற்று உலகில் மேம்பாடு அடையப் பாடுபட்டு வருகின்றன. ஆனால், இந்தச் சுதந்திரம், அதுவும் – பூரணசுதந்திரம் என்றால் எத்தகையது என்பதைப் புரிந்து செயல்பட்டு வரும்நாடுகள் தாம் நல்ல வளர்ச்சி பெற்று வருகின்றன. அங்கே அமைதியும் பல் வளங்களும் பெருகி, தொழிற் பெருக்கமும், பொருட்பெருக்கமும் பெற்று, மேன்மேலும் உயர்ந்து வருகின்றன. எவ்விதம்?

பூரண சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்ட அவைகள் தமக்குத்தாமே சில பல கட்டுப்பாடுகளையும், நியதிகளையும் விதித்துக்கொண்டுள்ளன என்பதை நாம் அறிவோம். சுதந்திர நாட்டில் வாழும் சுதந்திர மக்களுக்குக்கூடக் கட்டுப்பாடு தேவைதானா என்று எண்ணி – கிடைத்த சுதந்திரத்தை அனுபவிக்கத் தெரியாத நாடுகளில் குழப்பமும் அமைதியின்மையும், பல இன்னல்களும் உண்டாகி மற்றவர்கள் குறைவாக மதிப்பிடும் நிலையில் வளர வழிதெரியாது தயங்கிச் சீர்குலைவுபெற்றுத் தாழ்ந்த நிலையில் இருந்து வருவதையும் நாம் அறிவோம். இந்த அமைப்பு ஒரு நாட்டுக்கு எவ்விதம் பொருந்துமோ அதேபோல

ஒவ்வொரு குடும்பத்துக்கும், தனிமனிதனுக்கும் பொருந்துவதாகும்.

இந்தநிலையை இறைவன் படைப்பிலேயே அமைத்துக்காட்டி இருக்கிறான். அதாவது அந்தந்த உயிரின் தகுதிக்கேற்ப அருளிச் செய்திருக்கும் இந்த உடம்பின் அமைப்பில் அதன் இயக்கமாக அதனை அமைத்துக்காட்டி இருக்கிறான். நமது உடம்பிலுள்ள பல்வேறு உறுப்புகளும் தனித்தனியே சுதந்திரமாக இயங்கக் கூடியவைகளாக அமைந்திருந்தாலும் இவை எல்லாவற்றையும் காத்து ஒழுங்குபடுத்தி நடத்திச் செல்வதற்கு நமது தலையில் ஒரு அமைப்பைப் படைத்திருக்கிறான். அதுதான் மூளை என்ற பகுதியாகும். அது, தானிருந்த நிலையிலே இருந்து கொண்டு எந்தெந்த உறுப்பு எந்தெந்தச் செயலுக்கு எவ்விதம் எந்த அளவு இயங்கவேண்டுமோ அவ்விதமாக இயங்குவதற்கு ஒரு நியதியைக் கொண்டு நடத்தி வருவதால்தான் நம்முடைய செயல்கள் நன்முறையில் நடைபெற்று வருகின்றன. அவ்விதம் இயங்குவதில் எந்தப் பகுதியிலாவது நியதியில் மாறுபாடு அதாவது, இயக்க மிகுதியோ குறைபாடோ ஏற்பட்டால் அதனை நோயாகக்கொண்டு அதனைத் திருத்தத்தக்க ஒரு மருத்துவனை நாடிப்பரிகாரம் பெற்றுத் திருத்திக்கொள்கின்றோம். இந்த உடலுறுப்புக்கள் இவ்விதம் ஒரு நியதியின்கீழ் இயங்க மறுத்துத் தனித்தனியே சுதந்திரம் பெற்று இயங்கத்தொடங்கினால் அந்த நிலையை என்ன என்று சொல்லுவோம்? அந்த நிலையில் நாம் உயிர்வாழ்வதன் பயன்தான் என்ன? நாம் நல்ல நிலையில் வாழ முடியுமா? இதேபோலத்தான் நம் நாட்டுச்சுதந்திரத்திலும் நாடு நல்லமுறையில் இயங்க வேண்டுமானால் ஒரு சில கட்டுப்பாடுகளையும் நியதிகளையும்உட்கொண்டு எல்லாமக்களும் செயல்பட்டு வந்தால்தான் முன்னேற முடியும்.

இறைவனது அருளாட்சியை அடியொற்றியதே நமது நாட்டாட்சியும். அந்தந்த நாட்டாட்சியும் அங்கங்குமுள்ள மக்கள் எல்லோரும் நலம் பெற்று வாழவேண்டும் என்று ஒல்லும் வகையால் எல்லாம் செயல்படுவதுபோலவே உயிர்களும் வாழும் வகையால் வாழ்ந்து இன்பம் பெறுதல் வேண்டும் என்று இறைவன் கருணை பாலித்து வருகிறான்.

நமது சமூக அமைப்பில் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு தலைவன், ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு தலைவன் என அமைத்துக்கொண்டிருக்கின்றோம். அந்தந்த வீட்டிலுமுள்ள பிள்ளைகள் முதலானோர் நலமுடன் வாழவேண்டுமென்றே அந்தந்த வீட்டுத் தலைவனும் விரும்புவான். நலம்பெறுவதற்கு உரிய முறையில் அவன் தன் மக்களை நல்லறிவு புகட்டி இட்டுச்

செல்வான். பிள்ளைகள் எல்லோரும் நல்லவர்களாக அமைந்து விடுவார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஒரு சிலர் நல்லவர்களாகவும் மற்றவர்கள் எந்த நியதிக்கும் கட்டுப்படாதவர்களாகவும் அமைந்துவிடுவதுமுண்டு அப்பொழுது நல்லவர்களை அன்பாக நல்லமுறையில் நடத்தி அவர்கள் மேம்பாடு அடையச்செய்வான். தலைவன் மற்றவர்களைக் கண்டித்துத் தண்டித்துத் திருத்தி அவர்களை நல்வழிப்படுத்துவான். அதேபோலத்தான் நாட்டாட்சியிலும் நல்ல குடிமகனுக உள்ளவர்களுக்குப் பட்டம் பதவிகள் முதலியவற்றை வழங்கி அவர்களை ஊக்குவித்து மேலோங்கச் செய்து அரசு காத்துவரும். அடங்காது புரட்சிசெய்வோரைத் தண்டித்து ஒறுத்துத்தான் திருத்தவேண்டியதாக இருக்கும். இந்த இருசெயல்களாலுமே நாடு ஆளப்படுகிறது. மக்களும் நலம்பெறுகின்றனர். நாடும் நலம்பெறுகிறது.

இதனை ஒத்தே நம்மீது கருணைகாட்டும் இறைவனது ஆட்சியும் நடைபெறுவதாக இருக்கிறது. நல்லுயிர்களை நற்கருணையினுலும், மற்றவர்களை மறக்கருணையினுலும் உய்வித்துக் காத்து வருகிருன் என்பதை நமது ஆசாரியப் பெருமக்கள் விளக்கியுள்ளார்கள். அதாவது :-

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம் சொல் ஆற்றின்
வந்திடாவிடினுறுக்கி வளாரினுல் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம் பார்த்திடிற் பரிவேயாகும்
இந்தநீர் முறைமையன்றே ஈசனுர் முனிவும் என்றும்.

இதற்கு உதாரணமாக, சூரனை வதைத்தது, முப்புரம் எரித்தது முதலியவற்றைக் கொள்ளலாம். சூரன் திரிபுராதிகள் முதலியோர் நியதியில் நில்லாது நெறி தவறியவர்கள். அவர்களுக்கும் உய்வு அளிக்கத் திருவுளங்கொண்டே பெருமான் அவரவர் நிலைக்கேற்பத் திருவுருவங்களையும் மற்றும் துணைப்பொருட்கள் முதலியவற்றையும் அமைத்துக்கொண்டு அவரவரையும் தம் மறக்கருணையினுல் அடக்கி ஆட்கொண்டு தம்மாகிலேயே அமைத்துக்கொண்டு அருள்பாலித்துள்ளான். வழி தவறிச் சென்றவர்களை வாட்டி அடக்கி, நலம்சான்ற அடியார்களுக்கு வழங்கும் திருவடிப்பேற்றை – பேரா இன்பப் பெருவாழ்வை அவர்களுக்கும் அளித்துக் காத்தருளியிருக்கிருன். இதுவே நமது சமயங் காட்டும் சுதந்திரமும் பயனுமாகும். அதனைக் கைக்கொண்டு ஒழுகி நலம் காணும் வழியும் ஆகும். இத்தகைய சுதந்திரத்தை ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டு இருந்து அனுபவித்துச் சுதந்திரத்தின் முழுப் பயனையும் பெற நாமும் முயல்வோமாக.

குருபாதம்

கும்பகோணம்

ஸ்ரீ கும்பேசுவரசுவாமி திருக்கோயிலில் நிகழ்ந்த
தெய்வீகப் பேரவை மாநாட்டில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை

30—7—75

வம்மின்னடி யீர்நாண்மல ரிட்டுத்தொழுதுய்ய
உம்மன்பினொ டெம்மன்புசெய் தீசன்னுறைகோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள் கெண்டித்திசையெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் விழிம்மிழலையே. — சம்பந்தர்.

## சமய வளர்ச்சிக்கு ஆக்கம் தேட :

நாம் ஒருங்கிணைந்து சமய வளர்ச்சிக்கு ஆக்கம் தேட இங்குக் கூடியுள்ளோம். இந்த எண்ணம் இன்று எழுந்ததல்ல. எத்தனையோ பெரியவர்கள் எவ்வளவோ காலத்திற்கு முன்பிருந்து நினைத்திருந்த திண்ணமான எண்ணங்கள் இப்போது நடைமுறைக்கு வந்துள்ளன. நம்மிடம் தெய்வபக்தி ஆன்மீக நம்பிக்கைகளுக்குக் குறைவில்லை. ஒன்றுபட்டுக் காரியம் செய்ய முடியவில்லை. நாம் ஒருங்கிணைந்த அமைப்பில் ( Organisation ) செயல்பட வேண்டும். அதுகருதியே இப்பேரவை அமைக்கப் பெற்றுள்ளது. இதனால் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் அரசுக்கும் நன்மை ஏற்படும். இதை உருவாக்கிய பெரியார்களின் சிந்தனை அழுத்தமாக இருந்ததால்தான் இந்தப்பேரவை விறுநடை போடுகிறது மேலும் வளர உள்ளது. இதன் வளர்ச்சிக்காகக் கயிலைக்குருமணி அவர்கள் வெகுகாலம் முயன்றார்கள். நாம் உடன் இருந்துபார்த்தோம். கயிலைக் குருமணி அவர்கள் இதன் தலைமைப் பொறுப்பை அடிகளாரிடம் வழங்கினார்கள்.

## பொது அமைப்பே பேரவை :

"நாம் நம் பெருமையை எண்ணிக்கொண்டிருந்தால்மட்டும் போதாது. அதை மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். அதற்கு ஆங்காங்கும் சென்று ஓடியாடி வேலைசெய்ய – சமயம் பரப்ப ஒருவர் தேவை. அதைச் செயல்படுத்தும் ஞானக் குழந்தை நம் அடிகளார்" என்று கயிலைக் குருமணி அவர்கள் திருவுளங் கொண்டார்கள். அதை அப்படியே செயல்படுத்திவருகிறார்கள் நம் அடிகளார் அவர்கள்.

இந்து மதத்தில் எல்லாச் சமயத்தையும் ஒருங்கிணைக்கும் நிறுவனம் இல்லை என்று கூறிவந்தார்கள். அக்குறையைப் பேரவை நிறைவுசெய்துள்ளது. இந்து மதத்தில் வேதாந்தம், சித்தாந்தம், வைணவம், வீரசைவம், கௌமாரம் என்ற பல பிரிவுகள் உள்ளன. அவையெல்லாம் ஒன்றுசேர்ந்த நிறுவனமாகப் பேரவை விளங்குகிறது. அவ்வச்சமயத்தவர்களும் தனித் தனியான செயலை கொள்கையைக்கொண்டிருந்தாலும் இத்தனையும் சேர்ந்ததுதான் இந்துமதம் இவையெல்லாவற்றிற்கும் பொதுவான அமைப்பே பேரவையாகும்.

## ஆன்மீக வளர்ச்சி :

உயிரை வளர்க்க ஆன்மீக வளர்ச்சி தேவை. ஆன்மீகத்தை வளர்க்கப் பணி செய்வதுதான் பேரவை. இவ் ஆன்மீகத்தைத் தமிழகத்தில் உறுதிபெற வளர்த்தால் பின்பு இந்தியா முழுவதும் வளர்க்கலாம். நாடு முழுவதும் ஆன்மீகத்தை வளர்க்க இப் பேரவைக்கு உறுதுணையாக நின்று ஆலயங்களும், மடாலயங் களும், அரசும் உதவிவருகின்றன

ஆன்மீக வளர்ச்சியினால்தான் நாட்டில் கட்டுப்பாடும் ஒழுங்கும் நிலைபெறமுடியும். கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பாடுபடும் அரசுக்கு ஆன்மீகத்தை வளர்ப்பதன் மூலம் இப்பேரவை உதவிசெய்கிறது.

## பேரவைத் தலைவர் தேர்தல் :

இன்று மாலை இப்பேரவையின் தலைவர் தேர்தல் நிகழ்ந்தது. அதில் குன்றக்குடி அடிகளாரையே மீண்டும் எல்லோரும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது அப்போது 'உங்களுக்குக் கயிலைக் குருமணி இட்ட பணி இது. இதில் தொடர்ந்து செயல்படுங்கள்; நாங்கள் உங்களுக்குப் பக்கபலமாக

இருந்து வேண்டிய உதவிகளைச் செய்கிறோம்' என்று அடிகளார் இடம் தெரிவித்தோம்.

கயிலைக் குருமணி அவர்கள் நம்மிடம் ஆலயங்கள் ஆதீன நிர்வாகம் ஆகிய உள்ளாட்சித் துறையையும், பேரவை சமயப் பணியாகிய வெளியாட்சியை அடிகளாரிடமும் கொடுத்தது ஒரு இடத்தில் வளர்ந்த இரு பிள்ளைகள் என்பதனால்தானோ என்னவோ என்று நாம் எண்ணுவதுண்டு.

ஜனநாயக நாட்டில் ஒழுங்கு கட்டுப்பாடு அமைதி குறைந்த காலங்களில் அவற்றை மீண்டும் ஏற்படுத்த இராணுவ ஆட்சி வருவதுண்டு. நம் நாட்டில் சிலகாலமாக கட்டுப்பாடு அமைதி ஒழுங்கு இவை இன்றி பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு மக்கள் அல்லற்படும் நிலை இருந்தது. மக்கள் நீதி ஒழுங்கு கட்டுப்பாடு இவை ஏற்படுமா என்று ஏங்கியிருந்தனர் இந்தச் சமயத்தில் ஜனநாயகத்தைவைத்தே மக்களை ஒழுங்குபடுத்தும் நிலை-அவசர நிலை பிரகடனம் வந்துள்ளது. இவற்றிற்கெல்லாம் நாம் நடத்தும் வழிபாடுதான் காரணம்.

பேரவைத் தலைவர் தேர்வில் பேரவை, அரசு, குடும்பம் சமுதாயம் இவற்றிற்கு வழிகாட்டுவது போலவே நடந்து கொண்டிருக்கிறது. இதுபோல ஆட்சித்துறையிலும் நல்ல திறமை உடையவர்களை ஆளவிட்டுவிட்டு மற்றவர்கள் பக்கபலமாக இருக்கவேண்டும் பேரவை இதேநிலையில் வளரவும் அடிகளார் ஆற்றல் வளர்ந்து நாட்டுமக்களுக்குப் பயன்படவும் இறையருளைப் பிரார்த்திக்கிறோம்.

## பேரவை உறுப்பினர்கள் :

தமிழ் நாட்டில் பேரவையின் கிளைகள் பல உள்ளன. ஒரு லட்சம்பேர் உறுப்பினர்களாக உள்ளனர் இன்னும் அதிகமாக உறுப்பினர்கள் சேரவேண்டும். அவரவர்களும் ஊக்கம், உழைப்பு பொருள் ஆகியவற்றைக் காணிக்கையாகத் தருதல் வேண்டும். அடுத்த ஆண்டு பேரவை இன்னும் மேலும் மேலும் வளர்ச்சியடையவேண்டும். அரசு இதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும். அடிகளார் சொன்னால் அரசினர் கேட்பார்கள் ; செய்வார்கள் என்பது அனைவரும் அறிந்தது. அதற்காகத்தான் அடிகளாரையே மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளோம். திருக்கோயில்களில் இன்னும் நல்ல முறையில் வழிபாடுகள் வளர வகைசெய்யவேண்டும்.

## சமயப் பிரசார நிலையமாக :

ஆலயப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தல் வேண்டும். அவற்றிற்கேற்ப திருக்கோயில்களின் வருவாய் பெருகுதல்வேண்டும் என்பதை அரசும் ஆலயப்பணியாளர்களும் கவனத்திற்கொள்ளவேண்டும். திருக்கோயில்கள் சமயப் பிரசார நிலையமாகத்திகழ வேண்டும். திருக்கோயில்வழிபாட்டிற்குவருவோர்க்கு, சிவாச்சாரியர்களும், ஓதுவார்களும், சமயப்பரப்புநர்களும், திருக்கோயில் நிர்வாகிகளும், வழிபாட்டு முறைகளையும், வழிபாட்டின் பயன், தலச் சிறப்பு முதலியவைகளையும் விளக்கமாகச் சொல்ல வேண்டும். அவர்களை வழிபாட்டில் ஈடுபடுத்தவேண்டும் வழிபட வருவோரும் சமய தத்துவங்களையும் விளக்கங்களையும் தாமாகக் கேட்டுத் தெரிந்துகொள்ள முயலுதல்வேண்டும். அது இந்துக்களின் கடமையாகும். திருக்கோயில்களுக்கு, தமக்கு விருப்பமான நாட்களில் சென்று வழிபாடு நிகழ்த்தினாலும், வாரம் ஒரு முறையாவது கூட்டாகச் சேர்ந்து வழிபட வேண்டும். கிறித்தவர்கள் கூட்டாகச் சேர்ந்து ஞாயிறுதோறும் வழிபாடு நிகழ்த்தி சமயதத்துவ விளக்கம் செய்வதுபோல ஆயிரம்பேருக்குக் குறையாமல் ஒன்று சேர்ந்து கூட்டு வழிபாடு நிகழ்த்தவேண்டும். இதற்கு என்று ஒரு அமைப்பு அமைக்கலாம். கிராமங்களில் பேரவைச் சங்கம் ஒன்று இருந்தாலும் திருக்கோயில்களில் பணி செய்கின்றவர்களும் திருக்கோயில் வழிபாட்டிற்கு வருகின்றவர்களுமாகச் சேர்ந்து ஒரு பேரவைச் சங்கம் அமைக்கலாம் 'உம் அன்போடு எம் அன்புசெய்ய, இறைவன் எழுந்தருளியுள்ள இடம் திருக்கோயில்' என்று கூறுகிறார் திருஞானசம்பந்தர். அம்முறையில் வழிபடவருபவர்களும் திருக்கோயில் பணியாளர்களும் சேர்ந்து அமைக்கும் பேரவையின்மூலம் மூர்த்திகளின் தத்துவ விளக்கம், நாயன்மார்கள் வரலாறு, வார வழிபாடு முதலிய விளக்கங்களைக்கூறி மக்களைச் சமயத்தில் ஈடுபடுத்தலாம்.

## தத்துவ விளக்கம் :

திருக்கோயில் பூஜைகள் செம்மையாக நிகழவும், கூட்டு வழிபாடு முதலியவை சிறப்புற நிகழவும் மடாதிபதிகளும் மக்களும் சேர்ந்துதான் செய்ய வேண்டும். மன்னர்கள் கட்டிய கோயில்களை மடாதிபதிகள் காத்துவருகின்றனர். இக்கால மன்னர்களாகிய மக்களும் சான்றோர்களும் திருக்கோயில் பாதுகாப்பிற்கு ஒத்துழைக்கவேண்டும். விநாயகருக்கு ஏன் வயிறு பெரிதாக இருக்கிறது? முருகனுக்கு ஏன் ஆறு முகங்கள் என்பன போன்ற பல ஐயங்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன. குழந்தைகளுக்கு மூர்த்திகளின் தத்துவங்களைக்கூறி அவற்றை மனத்தில்

பதிய வைத்துவிட்டால் பிறகு அவர்களை யாராலும் மாற்றமுடியாது 'உலக அண்டங்களை எல்லாம் விநாயகர் தம் வயிற்றில் அடக்கி இருக்கிறார். அதனால் அவர் வயிறு பெரிதாக இருக்கிறது என்ற தத்துவத்தையும், நான்கு திசைகளோடு மேல் கீழ் என்ற திசைகளையும் சேர்த்து ஆறு திசைகளிலும் உள்ள உயிர்களின் குறைகளை ஆறுமுகங்களினாலும் பார்த்துப் போக்கி அருள்கின்றான் முருகன் என்ற தத்துவத்தையும், இதுபோன்று நடராஜர் முதலிய மூர்த்திகளின் தத்துவங்களையும் விளக்கிக் கூறினால் மக்களுக்கு ஏற்படும் வீணான ஐயங்கள் நீங்கும். சமயம், சமயப் பண்பு, மடாலயங்கள், தத்துவங்கள் இவற்றை மக்களிடையே விளக்கிக் கூற பேரவைச் சங்கம் ஆவன செய்யவேண்டும்.

மக்களும் பேரவையும் மேற்கொள்ளும் இப்பணிகளெல்லாம் செம்மையாக நிகழவும் பேரவை மேன்மேலும் சிறப்புற்றோங்கவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

## திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தரிசித்து மகிழ்ந்த மகா கயிலாயக் காட்சி, பதினொருவது ஆண்டுவிழா 7—8—75 வியாழக் கிழமை ஆதீன மடாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜை மடத்தில் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்கு காலை மாலை இரு வேளைகளிலும் சிறப்பு வழிபாடும், இரவு பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு வெள்ளிரதத்தில் திருவீதியுலாவும் நிகழ்ந்தன. பூஜைமடத்தில் திருமுறை அகண்டபாராயணம் நிகழ்ந்தது, மாலையில் பேராசிரியர்களால் திருக்கயிலைபற்றிய விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கயிலாய நிலையத்தில் கயிலாயத்திருவுருவப் படத்திற்கு சிறப்பு வழிபாடு நிகழ்த்தி. திருவாரூர் இராஜன்கட்டளை ஓதுவார் திரு சம்பந்த தேசிகர் அவர்களுக்குப் பொன்னாடை வழங்கி திருவீதியுலா விற்கும் உடன் எழுந்தருளினார்கள். மாயூரம் அன்பர்களும், சிதம்பரம் அறப்பணிச் செல்வர் டாக்டர் திரு. K அரங்கசாமிப் பிள்ளை முதலியவர்களும் வந்து வழிபட்டு ஆசிபெற்றார்கள்.

---

உ

திருச்சிற்றம்பலம்

நாளது திருவள்ளுவராண்டு 2006

ஆடித்திங்கள் 14 ஆம்நாள் (30–7–'75) புதன்கிழமையன்று

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனப்
26 ஆவது குருமகாசந்நிதானம்

திருப்பெருந்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்களுக்கு

தமிழ்நாடு தெய்விகப் பேரவையினர் அளித்த

# வரவேற்பிதழ்

தலைமுடியிலங்கு சடைமுடிவிளங்கு தவமுதல் வருக!
[வெண்ணீற்றால்
தயைநெறிமலர்ந்து தகுதியில் ஒளிர்ந்த தனிநுதல் வருக!
[செவ்வாயில்
நிலைபெற அறிந்த திருமுறை உணர்ந்த நெறிமலர் வருக!
[கண் ஆய்ந்த
நிதியென அமைந்த கருணையில் அலர்ந்த நிருமல வருக!
[அறமேயாம்
மலையென நிமிர்ந்த மணியணி புனைந்த மணமலர் வருக!
[திருமார்பில்
மயலற நினைந்த மறைமொழி நிறைந்த மணியொலி வருக!
[சித்தாந்தக்
கலைநெறி பயின்ற கனிவது மிகுந்த கவினொளி வருக!
[அரனார்சேர்
கயிலையில் எழுந்த மரபது விளங்க கருணையின் அரசே
[வருவாயே!

அருமணியாய் விளங்கி, முதற் பேரவையின் தலைமை
அருளாட்சி செய்தவராம், அருந்தவத்தோர் கயிலைக்
குருமணியார் எங்களுக்குக் கொடுத்தமைத்துச் சென்ற
கொள்கைமணி யிரண்டாம் அக் கூர்மதியார் அளித்த
இருமணியுள் ஒருமணியே! இன்றொளிரும் குன்றை
எழில்மணியின் இணைபிரியாப் பெருந்துணையே வருக!
திருமணியாம் திருத்தருமைச் சண்முகதேசிகரே!
திருமுறையின் காவலரே சிறப்புடனே வருக!

மறப்பறியா அருளாட்சி மாண்புடைய கயிலை
மரபில்வரு மாதவர்கள் தலைமுறையே வருக!
சிறப்புடைய செந்தமிழ்த்தேன் திருமுறைகள் பண்ணில்
சேர்த்திசைக்கும் நற்குயிலே செய்தவமே வருக!
அறத்துரமாம் திருத்தருமை ஆதீன பீடம்
அலங்கரிக்கும் பெருந்தலைமை ஆட்சியினீர் வருக!
பிறப்பிலுறும் பேதங்கள் பேதைமைகள் நீக்கும்
பேரவையின் பேரங்கப் பெருந்தகையே வருக!

குருஞான சம்பந்தர் வழிவழியே ஒளிரும்
குலவிளக்கே! சித்தாந்தச் செம்மைநெறி விளக்கும்
பெருஞானச் சுடரான மெய்கண்டார் தமக்குப்
பெண்ணாகடத்தினிலோர் திருக்கோயில் கண்டோய்!
திருநாவுக் கரசருக்கும் திருவாரூர் தன்னில்
திருக்கோயில் அமைத்தவரே! தெருளுடையார் கருத்தில்
உருவான 'பேரவை' நும்வரவாலே புனிதம்
உற்றதின்று! சண்முகதே சிக, குருவே வருக!

நீண்ட நாள் நடைமுறைகள் நியமங்கள் தவறு
நெறிமுறையும் மரபுகளும் திறம்பாத வகையில்
தீண்டாமை விலகிடவும் திருத்தொண்டில் ஆர்வம்
திரும்ப வகை செயத்தகுந்த நெறியினைக் காட்டிடவும்
ஆண்டகையார் தெய்வநெறிச் சேக்கிழார் வாக்கின்
அருட் 'புனிதர் பேரவை' இவ் வமைப்பது நும் வரவால்
பூண்டதுகாண் பூரிப்பு! சண்முகதே சிகரே
புனிதமுறு திருமுறையின் புலமையினீர் வருக!

பொருள்நெறியில் மனமதனைப் போகவிட்டே காலம்
போக்குகின்ற மாந்தருக்குப் பொதுமை நெறி புகட்டி
இருள்நெறியில் செல்லாமல் ஏற்றவழி காட்டும்
இணையில்லாப் பேரவையின் இற்றைநாள் தலைவர்
அருள்நெறியின் தந்தைக்கோர் அருந்துணையே தருமை
ஆதீன ஆட்சிக்கோர் அணிவிளக்கே! சைவத்
தெருள்நெறியின் காவலரே! சண்முகதே சிகரே!
செம்மைநெறி திறம்பாத சீலத்தீர், வருக!

இன்பநெறிப் பேரவை, ஈராயிரத்தைந் நூறும்
இணைந்தகிளை, உறுப்பினர்கள் லட்சத்தை எட்டும்
ஒண்பதாண் டகவையிலே மாநில மாநாடு
ஒன்றுதிருத் தில்லையிலும் திருச்சியிலும் அதன் மேல்

தென்குமரி எல்லையிலும் திரளாகக் கூட்டித்
திக்கெட்டும் புகழ்முழங்கச் செய்தது, தாம் அறியும்!
அன்புமிகும் தம்முளத்தில் பேரவையின் வளர்ச்சி
ஆர்வத்தை நாம் அறிவோம்! அருட்கடைக்கண் தருக!

ஒப்பரிய வள்ளுவரின் உயர்வையெலாம் காட்ட
ஒருமலரும், உரைவளமும், ஒளிவிளக்காய்த் திகழும்
அப்பரது பெருஞ்சிறப்பை அகிலமெலாம் உணர
ஆராய்ச்சி மலரொன்றும், சம்பந்தர் – ஆண்டாள்
செப்பரிய சீர்த்தியெலாம் சிறுவர்களும் அறியச்
சித்திரமும் ஆங்கிலத்தில் சிறுகுறிப்பும் சேர்த்தே;
முப்பதுநூல் பலலட்சம் படிகள் வெளியிட்ட
முயற்சியெலாம் தெளிவாக அறியும திருவுளமே!

மருளோசைக் கலக்கத்தால் மயக்கமுறப் பெற்றோர்
மதநெறியைக் கைவிட்டார் மாயைநெறி கொண்டோர்
இருளோசை மனத்தில் எழப் பெற்றவர்கள் எல்லாம்
இதயத்தில் ஒளிபெறவும், மறுமலர்ச்சியுறவும்
'அருளோசை' எனும் திங்கள் இதழ்ஒன்றும் பணியை
அறிவிக்க நற் 'செய்திக் கதிர்' என்னும் ஒன்றும்
தெருளோசை ஒலித்திட, நற் சண்முகதே சிகரே
தேர்ந்துரைத்தோம் வரவேற்பு திருக்குடந்தை நகரில்!

குருவே வருக! குருமணியின் கொள்கை விளக்கும் அருள்ஞானக்
கொழுந்தேவருக! புலவர்களின்குணம்பாராட்டிச்சிறப்பளிக்
தருவே வருக! தமிழினத்தின் தவமே வருக! திருத்தருமைத் [கும்
தலைவா வருக! பண்ணிசையில் தன்னைமறந்தே துதிபாடும்
அருளே வருக! பேரவையின் அங்கம் வருக! அருட்குலத்தின்
அரசே வருக! அரியமறை அறிஞவருக! அறம்புரக்கும்
திருவே வருக! திருமுறையின் தெளிவே வருக! சித்தாந்தத்
திரளே வருக! சண்முகதே சிகரே வருக! வருகவே!!

இயற்றியவர் :— பழ. தரும. ஆறுமுகம்,
அச்சக மேலாளர்,
தமிழ்நாடு தெய்விகப் பேரவை.

# திருக்கழிப்பாலைத் தலச்சிறப்பு

சிதம்பரத்திற்குத் தென்கிழக்கே சுமார் மூன்றுகல்தொலைவில் உள்ளது இத்தலம். சோழநாட்டு காவிரியின் வடகரைத் தலங்களுள் நான்காவதாகும்.

இத்தலம் முன்பு கொள்ளிடப்பேராற்றின்வடகரையில் காரைமேடு என்னும் இடத்தில் அமைந்திருந்தது. கடல் சார்ந்த உப்பங்கழிக்கரையில் அமைந்திருந்ததால் இத் தலம் கழிப்பாலை எனப்பெற்றது. பால் - நிலம். அது பாலை என மருவிற்று.

கொள்ளிடத்தின் வெள்ளப்பெருக்கு, திருக்கோயிலை முற்றிலும் பாழ்படுத்தியகாரணத்தினால் படுகைமுதலியார் குடும்பத்தில் திரு. பழநியப்ப முதலியார் என்பவர் சிவபுரிக்குத் தெற்கில் கோயில் கட்டி அதில் கழிப்பாலை இறைவரையும் இறைவியையும் ஏனைய பரிவாரத் தெய்வங்களையும் எழுந்தருளுவித்துள்ளார்.

வான்மீகி முனிவர் பூசித்துப் பேறு எய்திய தலம். இம்முனிவர் அந்தணர் குலத்தில் தோன்றியவர். இளமையில் தம் குலத்தையும் ஒழுக்கத்தையும் மறந்து இழிகுலமாது ஒருத்தியை மணந்து வழிப்பறித்தொழில் செய்து வாழ்ந்து வந்தார். முனிவர் ஒருவரை இவர் மடக்கி வழிப்பறிசெய்ய முயன்றபோது அம்முனிவர் இத்தொழிலால்வரும் தீவினை உன்னைச்சேரும்; பொருளால்வரும் இன்பம் உன்மனைவி மக்களைச்சாரும் என்று அறிவுறுத்தினர். வான்மீகி முனிவர் உண்மைஞானம் பெற்றுத் தம்மீது புற்று மூடுமாறு நெடுங்காலம் தவம் செய்து இறைவன் அருள் பெற்றார். இராமகாதையை வடமொழியில் இயற்றியவர் இவரேயாவர்.

இத்தலத்திற்கு, ஞானசம்பந்தர் பதிகங்கள் இரண்டு திருநாவுக்கரசர் பதிகங்கள் ஐந்து சுந்தரர் பதிகம் ஒன்று ஆக எட்டுத் திருப்பதிகங்கள் இருக்கின்றன.

சுவாமியின் பெயர் ஸ்ரீ பால்வண்ணநாதர், அம்பாள் பெயர் ஸ்ரீ வேதநாயகி.

---

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நட்சத்திர நாளை 8—8—7? முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது.

(தொடர்ச்சி பக்கம் 392 இல் பார்க்க)

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருநின்றியூர்

ஸ்ரீ உலகநாயகி உடனுறைய ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரசுவாமி தேவஸ்தானம்

# நாள்வழிபாட்டு அறக்கட்டளைத் திட்டம்

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அச்சம் இலர் பாவம் இலர் கேடும் இலர் அடியார்
நிச்சம் உறும் நோயும் இலர் தாமும் நின்றியூரில்
நச்சம்மிட றுடையார் நறுங் கொன்றை நயந்தாளும்
பச்சம்முடை யடிகள் திருப் பாதம் பணிவாரே.

திருச்சிற்றம்பலம்

– ஞானசம்பந்தர்.

பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான், உயிர்கள் தம்மை வழிபட்டு உய்தி பெறும் பொருட்டு எழுந்தருளி விளங்கும் இடங்கள் கோயில்கள் எனப்படும். தென்னாட்டில் இத்தகைய சிவாலயங்கள் எண்ணிறந்தன உள்ளன. இவைகளில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் தேவாரப் பாடல் பெற்ற சிவாலயங்கள் சிறப்பாக போற்றப் பெறுகின்றன. திருநின்றியூர் மூவர் பதிகம் பெற்றுள்ள சிறப்பும், தலபுராண வரலாற்றுச் சிறப்பும் உடைய சிறந்த தலமாக விளங்குகிறது இத்தலக் கோயில் நிர்வாகம் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தோடு இணைக்கப்பட்டுச் சிறந்த முறையில் பரிபாலிக்கப்பெற்றுவருகிறது.

இத்தலம், மாயூரமிருந்து சீகாழி செல்லும் கற்சாலையில் 6 கல் தொலைவில் அமைந்துள்ளது. திருமகள் வழிபட்டு அருள்பெற்ற தலமாதலின் திருநின்றியூர் எனப் பெயர்பெற்றது. மேலும் இந்திரன், அகத்தியர் பரசுராமன், ஐராவதம், சோழ மன்னன் முதலானோர் இத்தலத்திறைவனை வழிபட்டு அருள் நலம் பெற்றுள்ளனர். இறைவன் திருநாமம் ஸ்ரீ லக்ஷ்மிபுரீஸ்வரர். இறைவி ஸ்ரீ உலகநாயகி. தீர்த்தம் நீலப்பொய்கை என

வழங்கப்படுகிறது. ஞானசம்பந்தர் தேவாரத்தில் "நீலம் மலர்ப் பொய்கை நின்ற நின்றியூர்" என இத்தீர்த்தம் குறிப்பிடப் பெறுகிறது. இது கோயிலின் மூன்று புறமும் அகழி சூழ்ந்து அழகாக விளங்குகிறது.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடலும் உண்டு திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இத்தலத்து இறைவனை வழிபடுவோர் அச்சம், பாவம், கேடு, நோய் இலராய் நீடுவாழ்வர் எனவும், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தில்,

"அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும்
நெஞ்சம் வாழி நினை நின்றியூரை நீ
இஞ்சி மாமதில் எய்திமையோர் தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே"

எனவும், "நின்றியூர் பற்றினரைப் பற்றா வினைபாவமே" எனவும், "நின்றியூர் உறையினல் தொழுவார் வினை ஓயும்" எனவும் கூறப்படுகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நின்றியூர்ப் பெருமானை வழிபட்டு அருள்பெற்றோர் பலரைக் குறிப்பிடுகிருர். இந்திரன் வழிபாட்டை ஏற்று அவனுக்கு வான நாட்டையும், அகத்தியர் வழிபாட்டில் மகிழ்ந்து அவர்க்குப் பொதியமலையில் இருக்கும் பேற்றையும் பால் சொரிந்தாட்டி வழிபட்ட பசுவுக்குத் திருவடிப் பேற்றையும், ஐராவதத்தின் வழிபாட்டுக்கு விண்ணுலகையும் அளித்த புராண வரலாறுகளைக் கூறியருள்கிருர்.

வேதம் ஓதுவதற்கு முன்னூறு வேதியர்களோடு 360 வேலிப் பரப்பை யுடைய நிலத்தை திருநின்றியூர் எனப் பெயரிட்டு அதனை அளித்து வழிபட்ட பரசுராமனுக்குத் திருவடிப்பேறளித்த செய்தியை,

"மொய்த்த சீர் முந்நூற்றறுபது வேலி
மூன்றுநூறு வேதியரொடு நுனக்கு
ஒத்தபொன் மணிக்கலசங்க ளேந்தி
ஓங்கு நின்றியூரென் றுனக்களிப்பப்
பத்தி செய்தவப் பரசுராமற்குப்
பாதங் காட்டிய நீதிகண்டடைந்தேன்
சித்தர் வானவர் தானவர் வணங்குஞ்
செல்வத் திருநின்றியூரானே"

என்று அருளிச் செய்துள்ளார்

இத்தகு சிறப்புமிக்க இத்திருக்கோயிலைச் சீரிய முறையில் திருப்பணிகள் செய்விக்கவும் நித்தியநைமித்திய விழாக்களைச் சிறப்புற நிகழ்த்தவும் திருவுளம்பற்றிய தருமையாதீனம் 26 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணைப்படி 7—7—75 திங்கட்கிழமை தொடங்கி சுவாமிக்கும் அம்பாளுக்கும் இலட்சார்ச்சனை நடைபெற்றுவருகிறது.

ஆடித்திங்கள் 30 ஆம் நாள் 15—8—75 கடை வெள்ளியன்று இலட்சார்ச்சனை நிறைவுபெறும் நாள்தோறும் மாலைநேரத்தில் சகஸ்ரநாம அர்ச்சனைகள் நிகழ்ந்துவருகின்றன. இவ்வர்ச்சனையில் அனைவரும் பங்குகொள்ளுவதற்கு வாய்ப்பாக அர்ச்சனை ஒன்றுக்கு ரூ. 7—50வீதம் இரண்டு அர்ச்சனைகளுக்கும் ரூ 15—00 கட்டணம் அமைக்கப்பெற்றுள்ளது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் அருளிச் செய்தபடி பரசுராமனால் 360 வேலி நிலமளித்து வழிபடப்பட்ட இத்தலத்து இறைவனை வழிபட்டு அனைவரும் எல்லாச்செல்வங்களும் பெற்று இனிதே வாழ்தற்பொருட்டு 'நாள் வழிபாட்டுத் திட்டம்' ஒன்று தொடங்கப் பெற்றுள்ளது. இத்தலத்திறைவன் வேண்டுவார் வேண்டுவதை அருளும் கருணைக்கடலாக விளங்குதலானும், இன்றைய நிலையில் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சிநிலைமாறி வளமைகள் பெருகவும், பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்கவும் இவ்விறைவனை வேண்டிச் செய்யும்வழிபாடு மிக்க பயன் தரும் ஆதலின் இத்திட்டம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணைப்படி தொடங்கப்பெற்றுள்ளது.

நாள் ஒன்றுக்கு ஒரு வேலி நிலவருவாயில் இத்தலத்து இறைவனை வழிபடும் நோக்கத்தோடு 360 வேலி நிலம் பரசுராமனால் அளிக்கப்பட்டிருந்ததனை நினைவு கொண்டு ஆண்டு முழுவதிலும் ஒவ்வோர் நாளில் தங்கள் தங்கள் பெயரால் அன்பர்கள் ஆராதனைகள் அர்ச்சனைகள் செய்விக்க ரூ. 360 முதலீடு செய்யும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது இத்திருக்கோயிலுக்கு நன்செயில் 8ஏக்கர் 16செண்டும். புன்செயில் 5ஏக்கர் 33 செண்டும் உள்ளன. இவற்றிலிருந்து வரும் வருமானம் இத்திருக்கோயில் வழிபாட்டுக்கு போதுமானதாக இல்லை செல்வவளத்தைத் தருபவளாகிய திருமகள் வழிபட்டுப் பேறுபெற்ற இத்தலத்தில் வழிபாடு நன்முறையில் நிகழவேண்டும் என்ற நிலையில்

இத்திட்டம் ஏற்பாடுசெய்யப்பெற்றுள்ளது. இத்திட்டத்தில்சேர்வதற்கு ஐம்பதுபேர் இதுவரையில் ஒப்புதல் அளித்துள்ளனர்.

அன்பர்கள் ரூபாய் 360 ஐ நிலைநிதியாகச் செலுத்தினால், இத்தொகை மூலம் கிடைக்கும் வட்டியினைக்கொண்டு தொகை செலுத்துவோர் விரும்பும் மாதத்தில் இறைவனுக்கும், இறைவிக்கும் அபிஷேகம் அர்ச்சனைகள் செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்பெறும்.

அன்பர்கள் இவ்வரிய திருவருள் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு ரூபாய் மூன்னூற்று அறுபதினை கீழ்க்காணும் எமது முகவரிக்குப் பணவிடை M. O.) வழியோ, அல்லது வங்கி டிராஃப்ட் வழியோ அனுப்பிவைத்து நல்லருள்பெற்றுச் சிறந்து வாழ்வார்களாக.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
அருளாணையின்வண்ணம்

ஸ்ரீ வைத்தியநாதசுவாமி
தேவஸ்தானம்
வைத்தீசுவரன்கோயில்
மாயூரம்
12—8—75


வித்துவான், இராமலிங்கத் தம்பிரான்.
கட்டளை விசாரணை

---

(388 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கழிப்பாலைத்திருக் கோயிலில் நான்குசோழர் காலக் கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. முதலாம் இராசராசன் ஒரு நுந்தா விளக்கு எரிக்க திருக்கழிப்பாலை மகாதேவர்க்குப் பத்து காசுகள் தானம் செய்த செய்தியும், கங்கை கொண்ட சோழன் காலத்தில் கங்கைகொண்ட சோழபுரத்துப் பணிப்பெண் ஒருத்தி இக்கோயிலுக்குப் பொன் அளித்த செய்தியும், முதலாம் இராசராசன் கல்வெட்டின் ஒரு பகுதியில் பகல் பூசைக்குத் திட்டம் செய்த செய்தியும், மற்றொரு பகுதியில் மாதேவிப் பேரங்காடி வியாபாரி ஒருவன் கூத்தன் அழகன் என்பானின் பெயரும் கோயிலுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு நாழி தும்பை மலர் அளிக்க வடுகன் நல்லூரடிகள் என்ற விக்கிரம சோழ பிரமமாராயன் ஐந்து காசுகள் கொடுத்த செய்தியும் குறிக்கப் பட்டுள்ளன.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்கு வருகை புரிந்த
ஆசியமொழிக் கவிஞர்களுக்கு



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாசி வழங்குதல்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப் பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. கையொப்பத்தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி ஞானசம்பந்தம் பெற்றுப் பயனுறவும்.

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுச் சந்தா (உள்நாடு) | .... | ரூ. | 6—00 |
| ஆண்டுச் சந்தா (சிலோன்) | .... | ரூ. | 7—00 |
| ஆண்டுச் சந்தா (வெளிநாடு) | .... | ரூ. | 10—00 |
| ஆயுள் சந்தா | .... | ரூ. | 100—00 |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :—

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் 609001
தஞ்சை மாவட்டம்.

# உலகுரை பலவகை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. த. ரா. முருகவேள், M. A., M. O. L.,

( மலர் 34. இதழ் 8. பக்கம் 348 - இன் தொடர்ச்சி )

‘ அபிமானம் அறுத்தல் ’

இத்தகைய சுவைமிகுந்த சிறந்த கருத்து அமைந்த பாடல், பாம்பன் சுவாமிகள் அருளிச்செய்த ‘குமரகுருதாச சுவாமிகள் பாடல்’ என்னும் நூலில் “ அபிமானம் அறுத்தல் ” என்னும் தலைப்பிற் காணப்படுகின்றது. அதன் முதன்மைப் பகுதி வருமாறு :–

“ கிடைப்படா துலக மானியமிற் சிக்குபு
விடப்படா தலைவோர், விரதமுள் ளோரைக்
கண்ணுறு கால், அவர் இல்லத் திருந்திடில்,
எண்ணகல் இல்லை ஏன் ? கருதினர் என்பர் ;
அறவு இருந் தியுள், ஏன் துறந்தனர் ? என்பர் ;
இறை ஆலயம்புக்கு இருந்து வழிபடின்,
இவர்க்குஏன் ஆலய வழிபாடு ? என்பர் ;
அவ்வணம் ஆற் றுவிடின் ஆற்றில்என் ? என்பர் ;
சடைமுண்டம் இலையேல் தவம் இன்று என்பர் :
சடைமுண்டம் உளவேல் சால்புக்கோ ? என்பர் ;
ஓர் இடத்து இருப்பின், உழிப்பற்று என்பர் ;
பார் இடத்து உலாவிற் பசுஅல என்பர் ;
உண்டுடுத் திடின், நமை ஒத்தவர் என்பர் ;
உண்டுடுக் காவிடின், உருற்றில்என் ? என்பர் ;
பேசி விளக்கிடிற் பிதற்றல்ஏன் ? என்பர் ;
பேசா திருந்திடிற் பிறர்க்குஎன் ? என்பர் ;
விழித்து நோக்கிடின் வெளிமுகம் என்பர் ;
விழியாது இருந்திடின் விழிக்கில்என் ? என்பர் !
அற்புதம் இலதேல் அருள் இன்று என்பர் ;

அற்புதம் உளதேல் அணிவித்தை என்பர் ;
ஆதலின் மனனே ! அவனியர் பலவாறு
ஓதுஇழி வுக்குநீ உள்உலைவு ஏதம்
உறல்ஒழிந்து, எம்மான் உரைத்தசன் மார்க்க
முறையில் உனக்குஈது பிடித்தமும் முயல்வும்
உள்ளதோ அவ்வாறு உற்றுஎம் கடவுளாய்
உள்ள குகேசனை உலப்பில் உண்மையை
உருஅரு இன்றி ஒளியிருள் இன்றிச்
சுத்தசித் தாகச் சூழ்ந்து,
சத்திய முத்தி தான்அடை வாயே [ "

வேற்றிடக் கூற்றுகள் :

இங்ஙனம் ஞானப்பெருஞ்சான்றோர்களைக் குறித்தும், உலக மக்களின் உரைகள் பலவகையாக நிகழ்தலை ஓர்ந்துணர்ந்ததன் பயனாகவே, மணிவாசகர் மேலைத் திருச்சதகப் பாடலை அருளிச் செய்தவராதல் வேண்டும்.

(1) " நாடவர் பழித்துரை பூணது வாக " (போற்றி-69)

(2) " நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடுஎய்த "
(அம்மானை-6)

(3) " நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப "
(பொற்சுண்ணம்-7)

(4) " பித்தன் என்றுஎனை உலகவர்
பகர்வதோர் காரணம் இதுகேளீர் " (அதி கய-4)

(5) " தில்லையான் அருள்போன்று
அலராய் விளைகின்றது அம்பல்
கைம்மிக்கு ஐய மெய்யருளே " (கோவை-180)

என வேறு பிற பல இடங்களிலுங்கூட, மணிவாசகப்பெருமான் அருளிச் செய்திருத்தல், நம்மனோர் ஆழ்ந்து சிந்தித்து ஆராய்ந் துணர்தற்கு உரியது.

முத்திரம் :

உலகுரை, பலவகைகளில் உண்மையுணராப் புன்மக்களால் ஓவாதொழியாது உலவவிடப்பெறும் நிலையினை யுணர்த்த, மால் இவன் என உணர்த்தல்; மனநிலைவில் ஓத்தன ஓத்தன

சொல்லிடல்; எவரும் தத்தம் மனத்தன பேசல் என மூவேறு வகைப்படுத்து மொழிந்தார். உலக மக்களெல்லாம் நண்பர், பகைவர், நொதுமலர் என்னும் முத்திறத்தின் அடங்குவர். ஆதலின் அம்முத்திறனும் முறையே சுட்டி, இங்ஙனம் மூவகையால் மாணிக்கவாசகர் மொழிந்தருளினர்போலும்!

"அண்டர் நாயகனர் என்னை அறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கு யான்எவ் வுருவாய் என்?"

என்றதற்கேற்ப, "இறைவனின் திருவுள்ளம் உவக்கும்படி நன்னெறி கடைப்பிடித்து ஒழுகுவோர், உலக மக்கள் கூறும் பலவகைப் பழித்துரைகளைப் பொருட்படுத்த வேண்டுவதில்லை" என்பது கருத்து.

## தற்போதம் கெடுதல்:

நம்மைப் பற்றிப் பிறர் என்ன நினைக்கின்றார்? யாது கூறுகின்றார்? என்று அறிய முயன்று அலமரும் தற்போதவுணர்வு கெட்டு,

"எனை நான் என்ப தறியேன்
பகல் இர வாவதும் அறியேன்"

என்றாற்போல, இறையருளுணர்வில் திளைத்து இன்புறும் பேற்றினை விரும்பியே, "எஞ்ஞான்றுகொல் சாவதுவே" என மாணிக்கவாசகர் ஆராமையுடன் வினவுகின்றார்.

## முடிவுரை:

ஞானிகள் போற்றினும் மகிழார், தூற்றினும் இகழார்; அவர்கள் தற்போதம் இழந்து சிவபோதத்திலேயே அழுந்தியிருந்து திளைப்பர்; 'ஞானிகளின் ஞானானுபவம் என்றும் எங்கும் ஒருபடித்தாகவே இயைந்து காணப்படும்' என்னும் உண்மைகளை, இவ்வாற்றால் நாம் இனிது உணரலாம்.

# தியானமும் விஞ்ஞானமும்

**திரு. பி. எஸ். வாசன்**

[ இந்திய முனிவர்கள் தியானம் செய்தே, தம் யோகசக்தியைப் பெருக்கிக்கொண்டனர். தியானம் செய்தல் உடலுக்கும் உள்ளத்துக்கும் உரமளிக்கிறது என்பது விஞ்ஞான உண்மை. ]

இறைவனுக்குக் 'கடவுள்' என்ற ஒரு சொல் தமிழில் வழங்குகிறது. கடவுள் என்பது எது? கட - உள். ஆம்! நமது மனத்தின் உள்ளே கடந்தால் காணப்படுவதே கடவுள் ஐம்புலன்களை அடக்கி மனத்தை, சிந்தனையை, உள்ளே கடத்தலையே ஆத்ம சிந்தனை என்று கூறுகிறோம். இதையே தியானம் என்று வழங்குவர்.

தியானத்தின் தனிச் சிறப்பைப்பற்றி எல்லா மதங்களும் வலியுறுத்துகின்றன. தியானம் செய்வது என்பது ஒரு கட்டாயக் கோட்பாடாக எல்லா மதங்களிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாரத நாட்டில் நம் முன்னோர்கள், பண்டைப் பெரு முனிவர்கள், இதுபற்றி விரிவான ஆராய்ச்சிகள் செய்து, தங்கள் அநுபவத்தைப் பல நூல்களில் விரிவாகத் தெளிவுபடுத்தியுள்ளனர். ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் பகவத்கீதையில் தியானத்தின் சிறப்பைப் பலவேறு இடங்களிலும் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டுகிறார்.

இதுவரையில் தியான நிலையைப்பற்றி விஞ்ஞானம் எவ்வித உற்சாகமும் காட்டவில்லை. தியானம் என்பது மதங்கள்கொண்டுள்ள வெறும் சடங்கு என்றே விஞ்ஞானிகள் கருதிவந்தனர். ஆனால், சென்ற சில ஆண்டுகளாக இந்திய யோகக் கலையில் பலவித ஆராய்ச்சிகளை நடத்திய மேல்நாட்டு அறிஞர்கள், தியானத்தைப்பற்றி விரிவாக ஆய்ந்து அதைப்பற்றிய பல புதிய உண்மைகளை வெளியிட்டுள்ளனர். இதுகாறும் தியானம் என்பது ஒரு மதக் கோட்பாடே என்று கருதிய விஞ்ஞானம், அது ஓர் அற்ப மதச் சடங்கல்ல; மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பெரும் சாதனம் என்ற முடிவுக்கு வந்துள்ளது. இன்று ஐக்கிய அமெரிக்காவிலும், பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி

முதலிய நாடுகளிலும் தியானத்தைப்பற்றித் தனிப் பயிற்சி வகுப்புகளே நடத்திவருகிறார்கள். தியானத்தைப்பற்றி விஞ்ஞானம் கூறும் உண்மைகளை ஈண்டுக் காண்போம்.

மனிதனின் வாழ்வில் மூன்று விதமான இயற்கை நிலைகளே உள்ளன என்று விஞ்ஞானம் இதுவரை கூறிவந்துள்ளது. ஒன்று விழிப்பு நிலை (Waking State); மற்றொன்று தூக்கநிலை (Sleeping State); மூன்றாவது கனவுநிலை (Dreaming or Hypnotic State). இம்மூன்று நிலைகளிலும் உடலில் என்ன என்ன மாறுபாடுகள் ஏற்படுகின்றன என்பதைப் பற்பல கருவிகளைக் கொண்டு விஞ்ஞானிகள் முன்னரே பல ஆராய்ச்சிகள் நடத்தியுள்ளனர். தியான நிலையில் நாடி நடையிலும், இரத்த அழுத்தத்திலும் மாறுபாடுகள் பல ஏற்படுகின்றனவாம். இரத்தத்திலுள்ள சர்க்கரைச் சத்திலும் (Glucose level) மாறுதல்கள் விளைகின்றன. இவற்றைத்தவிர மூளையில் தோன்றும் அலைகளின் தன்மையிலும் (Brain Waves) குறிப்பிட்ட மாறுதல்கள் ஏற்படுகின்றன. விழிப்பு நிலை, தூக்க நிலை, கனவு நிலை இம்மூன்றும் தனிப்பட்ட தன்மைகளை உடையனவாய் அமைந்துள்ளன.

தியான நிலையைப்பற்றி ஆய்வுகள் நடத்திய விஞ்ஞானிகள் ஒரு புதிய உண்மையைக் கண்டனர். தியான நிலையின்போது ஏற்படும் மூளை அலைகள் (Brain Waves) ஒரு குறிப்பிட்ட (Special) தன்மை வாய்ந்தனவாக உள்ளனவாம். இது விழிப்பு நிலையும் உறக்க நிலையும் கனவு நிலையும் அல்லாத ஒரு தனிப்பட்ட நிலை என்று கூறுகின்றனர். இதனையே மனத்தின் நான்காவது நிலை (Fourth State of the psycho) என்று விஞ்ஞானம் குறிக்கின்றது,

விழிப்பு நிலையில் மனிதனுடைய உடல் உறுப்புக்கள் வேலை செய்யும் நிலையில் உள்ளன. மனிதன் தன் நினைவு நிலையை (Consciousness) இழப்பதில்லை. ஆனால் உறக்க நிலையிலோ மனிதன் தன் நினைவை இழந்துவிடுகிறான். உடல் உறுப்புக்களும் தம் தம் நிதானத்தை இழந்து ஓய்வு கொள்கின்றன. தியான நிலையிலோ மனிதன் தன் நினைவினை இழப்பதில்லை. ஆனால் அவனது உடல் உறுப்புக்களும் மூளையும் தூக்க நிலையில் உள்ளதுபோல் அமைதிகொள்கின்றன. எனவே, தியான நிலையை விழித்துறங்கும் நிலை (Waking Sleep) என்றும் கூறுகின்றனர்.

தியான நிலையில் உடலில் ஏற்படும் மாறுபாடுகள் என்ன? இருதயத் துடிப்புக் குறைகின்றது. இரத்த அழுத்தத்திலும் குறைவு காணப்படுகின்றது. மூச்சு (Respiration) தளர்கிறது. இரத்தத்தில் ஏற்படும் லாக்டிக் அமிலம் (Lactic Acid) என்னும் நச்சுப் பொருளின் அளவும் குறைகிறது. தோலின் மின்தடைச் சக்தி (Electrical Resistance) அதிகரிக்கின்றது. அதாவது உறக்க நிலையில் காணப்படும் அறிகுறிகள் யாவும் ஈண்டுக் காணப்படுகின்றன. ஆனால் மனிதன் தன் விழிப்பு நிலையிலேயே இருக்கிறான்.

தியான நிலையினால் மனிதன் அடையும் நன்மைகள் என்ன? தூக்கத்தினால் உடல் புத்துணர்ச்சி பெறுகிறது. தூக்கம் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத சாதனம் என்ற உண்மையை நாம் அறிவோம். தூக்கத்தினால் ஏற்படும் புத்துணர்ச்சி தியானத்தினால் ஏற்படுகின்றது என்று கண்டுள்ளது இன்றையவிஞ்ஞானம். தற்கால வாழ்க்கை, சிக்கல் நிறைந்தது. மன அமைதி குறைந்து பற்பல உடல் ஊறுகளால் தாக்கப்பட்டு இன்னல் உறுகிறான் இன்றைய மனிதன். கடின வாழ்வின் ஊறுகள் (Diseases of Stress) எனக் கூறப்படும் இரத்த அழுத்தம், வயிற்றுப்புண், இருதய நோய்கள், தூக்கமின்மை, நரம்புத் தளர்ச்சி முதலியன தற்கால மனிதனை வாட்டுகின்றன. இவற்றிற்குரிய மருந்துகள் தற்காலச் சாதனங்களாகவே உள்ளன. இந்த நோய்களைக் களைந்தெறியச் சிறந்த சாதனம் தியானமே தவிர, வேறொன்றும் இல்லை என்ற முடிவுக்கும் வந்துள்ளனர் விஞ்ஞானிகள்.

நோய்களைக் களைந்தெறிவதில்மட்டுமல்ல. மனிதனது உடல் திறனையும், உள்ளத்திறனையும், சிந்தனை ஆற்றலையும் அதிகரிக்கச் செய்கின்றது, இந்தத் தியான நிலை என்று கூறுகிறார் கலிபோர்னியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ராபர்ட் வாலேஸ் என்பவர். தியானத்தினால் ஞாபக சக்தி, ஆக்கத் திறன் ஆகியவையும் அதிகரிக்கின்றனவாம். தூக்க நிலையை நம் விருப்பம் போல் ஆட்டிவைப்பது என்பது இயலாது. தூங்கவேண்டும் என்று ஒருவன் விரும்பினால் உடனே அவன் தூங்கிவிடமுடியாது. உறங்கிக்கொண்டிருக்கும் ஒருவன் வேண்டும்பொழுது திடீரென விழிப்பு நிலையை அடைந்துவிடவும் முடியாது. ஆனால் தியான சக்தியைக்கொண்டு ஒருவன் தன் விழிப்பு நிலையிலேயே ஆழ்ந்த உறக்கத்தின் பயனை அடைந்து அநுபவிக்கலாம்.

தியான நிலையின் எல்லையையே சமாதி நிலை என்று நம் நூல்கள் கூறுகின்றன. சமாதி நிலையில் மனத்தில் எண்ண அலைகள் (Thought Currents) முழுதும் மறைந்துவிடுகின்றன

புலனாற்றல் முழுதும் ஒடுங்கிவிடுகின்றது. இந்நிலையில்தான் மனிதன் யோகி ஆகிவிடுகிறான். பல நாட்கள் உணவின்றி, உறக்கமின்றி, சுவாசித்தலுமின்றி அவனால் இருக்க இயலும். உள்ளத்தால் உடலைக் கட்டுப்படுத்தமுடியும். தியான நிலையின் சிகரத்தை எட்டிய பல யோகிகள் பல அபூர்வசாதனைகள்புரிந்து மேல்நாட்டு விஞ்ஞானிகளையே திகைக்கவைத்துள்ளனர். யோக நிலையில் ஒருவன் தன் உடலின் அடிப்படை மாறுபாடுகளை (Basic metabolism) தான் விரும்பிய முறையில் மாற்றி அமைக்கலாம். இருதயத் துடிப்பையும் நிறுத்தலாம். மூச்சையே பல மணிநேரம் நிறுத்திவிடலாம். தியானம், யோகம் என்பவை கேலிக்கூத்து என்ற நிலை மாறி, இன்று அவை விஞ்ஞான உலகில் நிரூபிக்கப்பட்ட உண்மைகளாக ஆகிவிட்டன.

தியானம் யோகிகளுக்கு மட்டுமல்ல. ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத நல்வாழ்வுச்சாதனம். இதற்குப் பணம் தேவையில்லை; பிறர் உதவி தேவையில்லை. தினமும் சிறிதுநேரமாவது வெளி உலகை மறந்து புலன்களை அடக்கி எண்ண அலைகளை நிறுத்தி மனத்தை ஒருமுகப்படுத்துவோம்!

நன்றி. — கலைமகள்.

## பாடல் பெற்ற சிவதலங்கள் 274

| | | |
|---|---|---|
| மூவர் பாடலும் உள்ள தலங்கள் | | 44 |
| திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் | இருவர் பாடல் உள்ளவை | 52 |
| திருஞானசம்பந்தர், சுந்தரர் | ,, | 13 |
| திருநாவுக்கரசர், சுந்தரர் | ,, | 2 |
| திருஞானசம்பந்தர் பாடல் மட்டும் உள்ளவை | | 110 |
| திருநாவுக்கரசர் பாடல் மட்டும் உள்ளவை | | 28 |
| சுந்தரர் பாடல் மட்டும் உள்ளவை | | 25 |
| | | 274 |

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

( மலர் 34. இதழ் 5. பக்கம் 206 இன் தொடர்ச்சி )

குற்றவீ டராக மாதி
குணங்களைக் குறைத்த லாகும்;
மற்றவீ டுருவ மாதி
ஐந்தையும் மாய்த்த லாகும்;
சொற்றருந் தொகைதொ டர்ச்சி
மிகுத்துரை என்று மூன்றாய்
உற்றிடும் வழக்கி ரண்டும்;
ஒன்றுமூன் றாகி ஆறும். 69

## இதன் தெளிபொருள்

வீட்டின் வகை இரண்டனுள் குற்றவீடாவது, அவாமுதலிய குற்றங்களை நீக்குதல், கந்தவீடாவது, உருவம் முதலிய பஞ்ச கந்தங்களையும் கெடுத்தல். இருவகை வழக்குக்களும் 'தொகை தொடர்ச்சி, மிகுத்துரை ' எனத் தனித்தனி மூன்றாய், ஆறாகும்.

## விளக்கம்

அராகம் - அவா. குணம், தீக்குணம். அராகமாதி குற்றங்களாவன, 'காமம், வெகுளி மயக்கம்' என்னும் மூன்றுமாம். இனி, 'காமம, பொய், கொலை, களவு, கள், என்னும் ஐந்தும்' என்னும் கொள்கையும் உண்டு. பஞ்சகந்தங்களாவன, 'உருவம்' வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம்' என்னும் ஐந்துமாம். 'கந்தம்' என்பதற்கு 'கூட்டம்' என்பது பொருள்.

'உருவக்கந்தம்' எனப்படுவன, மேல் உருவத்தின் வகைகளாகக் கூறிய பூதங்களும், உபாதாயங்களுமாகும். வேதனைக் கந்தம், இன்ப அனுபவமும், துன்ப அனுபவமுமாம். வேதனையை 'வாதனை' என்றும் கூறுவர். குறிப்புக் கந்தம், மெய், வாய்

முதலிய பொறிகள் ஐந்தும், மனமும் ஆகிய ஆறுமாம். பாவனைக் கந்தம், மன மொழி மெய்களின் வழி உண்டாகின்ற புண்ணிய பாவங்கள். இவற்றுள் ஒவ்வொன்றையும் பத்துப்பத்தாகக்கூறி வரையறுக்கும், பௌத்த நூல்கள். ஏனையவைபற்றி விளக்கங்கள் அடுத்த பாட்டிலே வரும். 6

ஒருவன்என் றோதப் பட்டான்
உருவாதி ஐந்து கூடி
வருபவன் என்று ரைத்தல்
தொகைஉண்மை வழக்க தாகும்;
உருவம்அங் காதி யாய
ஐந்தையும் ஒருவன் நின்று
தருவது தொகையின் இன்மை
வழக்கதாம, சாற்றுங் காலே.

## இதன் தெளிபொருள்

'ஒருவன்' என்று அறிவுடைப் பொருளாக யாவராலும் சொல்லப்பட்டவன், உருவக் கந்தம் முதலிய பஞ்ச கந்தங்களும் கூடிய கூட்டமே யன்றி, அவ்வாறு ஒரு பொருள் தனியே இல்லை என்று சொல்வது உண்மைத் தொகை வழக்கு; இவ்வாறன்றி 'ஒருவன்' எனப்படுபவன் தனியே முன்னர் இருந்து, உருவம் முதலிய ஐந்தையும் படைத்தான் என்று சொல்வது இன்மைத் தொகை வழக்கு.

## விளக்கம்

தொகை, சமூகம் அல்லது சமுதாயம்' என்பர். 'எள், நெல் முதலியவற்றின் குவியல் போல எல்லாப்பொருள்களும் தொகுதிப் பொருளே; தனிப்பொருளாய் உள்ளது 'எதுவும் இல்லை' என்பது புத்த மதக் கொள்கை இவ்வாறு கூறுவது 'சமூக வாதம் அல்லது சமுதாயவாதம்' எனப்படும். 'உள்ளதை உணர்ந்து சொல்வது உண்மை வழக்கு' என்பதும், 'இல்லதை உள்ளதாக மயங்கிச் சொல்வது இன்மை வழக்கு' என்பதும் இங்கு அறியற்பாலன. இச்செய்யுளில் முதற்கண் "ஒருவன்" என்றது, உயிர் அல்லது ஆன்மாவை. இதனையும் பௌத்த மதம் கூட்டுப் பொருள் என்றே கூறுதல் இங்கு அறியத்தக்கது. இதனால், இம்மதமும் உலகாயதம் போல ஒருவகையில், 'உடம்பு தான் உயிர்' என்றுகூறுதல் தெளிவாகும். பின்னர் "ஒருவன்" என்றது, கடவுளை. அதனை 'இன்மை வழக்கு' என்றதனால், புத்த மதம் வைதிக மதங்கள் கூறுகின்ற கடவுளை ஒப்புக் கொள்ளாமை விளங்கும். 7

காரண காரி யத்தின்
தொடர்ச்சியாய்க் காலம் மூன்றில்
சோர்வறத் தோன்றும் கெட்டு
வழிஎன்கை தொடர்ச்சி உண்மை;
ஓர்தரின் ஒருவ னேஎக்
காலத்தும் உள்ளான் என்று
தேர்வது தொடர்ச்சி இன்மை
வழக்கதாம் செப்புங் காலே. 71

## இதன் தெளிபொருள்

'பொருள்களின் வழிமுறை, காரணம், காரியம்என்பவற்றின் தொடர்ச்சியேயாம். அஃதாவது, (வித்துக் கெட்டவிடத்து முளை தோன்றுதல் போல.) எக்காலத்தும் இடையறாது, ஒரு பொருள் கெட்டபொழுது மற்றொரு பொருள் தோன்றுவதே, என்று சொல்வது உண்மைத்தொடர்ச்சிவழக்கு. அவ்வாறன்றி 'ஒருவனே அல்லது ஒருபொருளே எக்காலத்தும் உள்ளான், அல்லது உள்ளது' என்று சொல்வது இன்மைத் தொடர்ச்சி வழக்கு.

## விளக்கம்

தொடர்ச்சியை, 'சந்தனம்' என்பர். எல்லாப் பொருளும் ஒருகணத்தில், (நொடியில்) தோன்றி மறு கணத்தில் அழிவனவே, மூன்றுங் கணத்தில் யாதொரு பொருளும் நிற்பதில்லை. ஆகவே, விரைய நிகழும் தோற்றத்தின் தொடர்ச்சியை பொருள்கள் நிற்பனவாக அல்லது என்றும் உள்ளனவாக - எண்ணுதல் மயக்க உணர்வே' என்பது இச் செய்யுளில் வேறு வகையில் கூறப்பட்டது இதனால் 'அறிவு அல்லது ஆன்மா, கடவுள் என்பன என்றும் உள்ள நித்தியப் பொருள் என வேத சிவாகமங்கள் கூறுவன எல்லாம் உண்மையல்ல' எனப் புத்த மதம் கூறுதல் வெளியாகும். 8

தோற்றிய பொருள்கள் எல்லாம்
நாசமாம் என்று சொல்லும்
மாற்றம்முன் உரைத்தல் மற்றை
மிகுத்துரை வழக்கின் உண்மை;
போற்றிய பொருள்கண் கட்குப்
போனது போல்மு திர்ந்து
வேற்றுமைப் பட்ட தென்கை
மிகுத்துரை இல்வ ழக்கே. 72

## கேரளத்தில் :

எட்டமானூர் மகாதேவர் ஆலயம் கேரளத்தில் மிகப் பழமையானது. இக்கோவிலில் இரு ரிடப வடிவங்கள் உள்ளன. ஒன்று கல்லாலானது. மற்ருென்று வெண்கல உலோகத்தாலானது. வயிற்றுவலியால் அவதிப்பட்ட ஒரு அரசன் அந்நோய் இறைவன் அருளால் நீக்கப்பட்டதன் காணிக்கையாக இந்த ரிடபம் முழுதும் நெல்லால் நிரப்பி 1545ல் அளித்ததாக வரலாறு கூறுகிறது. இன்னும் இந்த ரிடபத்தினுள் இருக்கும் தானியத்தில் ஒன்றை எடுத்து உண்டால் வயிற்றுவலி நீங்கி விடுகிறது என்ற நம்பிக்கை இருந்துவருகிறது. கேரளாவில் குழித்துறையிலிருந்து ஒன்பது மைலிலுள்ளது திருப்பரப்பு மகாதேவர் ஆலயம். இங்கு நதி வடக்குப்புறம் ஒரு ஓரமாக அமைந்துள்ளது. இங்குள்ள மூலவர் இறைவனின் அம்சமான வீரபத்திரர். இவர் கோபத்தின் உச்ச நிலையில் இருந்ததால் நந்தி இவர் முன்னல் இருக்க முடியாமல் வடக்கு நோக்கி ஒதுங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## வடநாட்டில் :

நேபாளத்திலுள்ள பசுபதிநாதர் ஆலயத்தில் நான்கு பக்கமும் நான்கு வாயில்கள். மேற்குவாயில் முன் பெரிய நந்தி உள்ளது. மேல்நோக்கிய முகத்துடன் அமைந்துள்ள இந்த நந்திக்குப் பொன் முலாமிட்ட தகடு ப்பார்த்தப்பட்டுள்ளது. ஒரு இடத்தில் நின்ற நிலையில் அதிகார நந்தி காட்சி தருகிருர்.

ஜோதிர்லிங்கத் தலமான ஓம்காரத்தில் நந்தி வாயிலில் எப்பொழுதும் ஜலம் வந்துகொண்டிருக்கிறது.

## காசியில் நந்தி இல்லை :

காசியிலும் நாசிக்கிலுள்ள காபாலேசுவரத்திலும் சிவலிங்கம் எதிரில் நந்தி கிடையாது.

சிவபெருமான் பிரும்மாவின் தலையொன்றைக் கொய்ததாக ஒருவரலாறு உண்டு. இதனல் ஏற்பட்ட பாபத்தை நீக்க அவர் பூலோகத்திற்கு வந்தார். நாசிக் ராம்குண்டத்தில் அவர் ஸ்நானம் செய்து வெளிவந்தபோது நந்திதேவர் அவருக்கு குருவைப்போல விளங்கினராம். ஆகவே நீ வேலைக்காரன் போல என் எதிரில் இருப்பது முறையன்று என்று சிவபெருமான் கூறினராம். ஆனல் காசியில்ஏன் நந்திஇல்லை என்பது ஆராய வேண்டிய விஷயம்.

(தொடரும்)

உள்ளது என்று உணர்ந்து கூறுதலும். இல்வழக்காவது இல்லதை இல்லை என்று உணர்ந்து கூறுதலும், ஆம் என்பதும், அவற்றிற்கு ஓரோர் எடுத்துக்காட்டும் இதனுட் கூறப்பட்டன. 'உள்வழக் குளதுண் டென்கை' என்னும் பாடம் சிறந்த தன்று. 10

உணர்வுசார்ந் துணர்வு திக்கை
உளது சார்ந்த உண்மை;
உணர்வுபின் இன்றும் என்கை
உள்ளது சார்ந்த இன்மை;
உணர்வுமுன் பின்றித் தோன்றல்
இலலது சார்ந்த உண்மை;
உணரின் இலலதுசார் இன்மை
உள்ளங்கை உரோம நாணே.

## இதன் தெளிபொருள்

'ஓர் உணர்வைச் சார்ந்து மற்றோர் உணர்வு தோன்றும்' எனக்கூறுதல் உள்பொருளைப் பற்றிய உண்மை வழக்கு. 'தோன்றிய உணர்வு பின்பு இல்லாது கெட்டொழியும்' என்று கூறுதல் உட்பொருளைப் பற்றிய இன்மை வழக்கு. 'முன் இல்லாத உணர்வு பின் தோன்றும்' எனக் கூறுதல் இல்பொருளைப் பற்றிய உண்மை வழக்கு. 'உள்ளங்கையில் உண்டான மயிரால் ஆகிய கயிறு எங்கும், எப்பொழுதும் இல்லை' எனக் கூறுதல் இல்பொருளைப் பத்றிய இன்மை வழக்கு

## விளக்கம்

எல்லாப் பொருளும் ஒரு கணத்தில் தோன்றி மறு கணத்தில் அழியும்பொழுது அந்த அழிவில் தோன்றும் பொருள், முன் தோன்றி அழிந்த பொருளைச் சார்ந்தே தோன்றும்; அதனால் அவ்வாறான சார்பினாலே பொருள்களின் தொடர்ச்சி உளதாகின்றது' என்னும் புத்த சமயக் கோட்பாடு இங்கு முதலில் உணர்வு' என்ற பொருளின்கண் வைத்துக் கூறப்பட்டது இதனுள், 'உண்மை வழக்கு' என்பது, பொருள்கள் உளதாமாற்றைக் கூறுதல் எனவும் இன்மை வழக்கு' என்பது, பொருள்கள் இலதாமாற்றைக் கூறுதல் எனவும் பொருள்படுமாறு அறிந்து கொள்க

முதற்றொட்டு இதுகாறும் புத்த மதத்தவர் தம் கொள்கையைக் கூறுமாறு கூறப்பட்டது. இனி அவர் பிற மதங்களை மறுக்குமாறு கூறப்படும். 11

(தொடரும்)

# நந்திக் கதம்பம். 5.

"நஜன்"

( மலர் 34, இதழ் 6, பக்கம் 264 இன் தொடர்ச்சி )

நந்தியின் பெயரில் ஒரு பெரிய ஊர் ஆந்திராவிலும் ஒரு பெரிய குன்று கர்நாடகத்திலும் உள்ளது.

ஆந்திராவில் கர்நூல் மாவட்டத்தில் நந்தியால் என்ற ஒரு வட்டமே உள்ளது. இங்குப்பத்தரைமைல் சுற்றளவுக்கு ஒன்பது நந்திகளின் கோயில்கள் உள்ளன. இவை பிரதம நந்தி, நாக நந்தி, விநாயக நந்தி, கருடநந்தி, சூர்ய நந்தி, சோம நந்தி, சிவ நந்தி, விஷ்ணு நந்தி, மகாநந்தி.

சிலாதா முனிவர் தவம் செய்து நந்தியை மகனாகப் பெற்ற இடம் இந்த 'மகாநந்தி' தான் என்கிறார்கள். இந்த நந்தி விரல் ஏற்பட்ட தீர்த்தமே மகாநந்தி தீர்த்தம் என்கிற தடாகமாகும். இங்குள்ள தீர்த்தம் ஸ்படிகம் போல விளங்குகிறது. எப்பொழுதும் மார்பு அளவுக்குத்தண்ணீர் தேங்கி யிருக்கும் படியான ஒரு ஏற்பாடு. குளத்தின் மத்தியில் நந்தி உருவம் உள்ளது.

இங்கு ஆலயத்திலுள்ள லிங்கம் சுயம்புவானது; பெயர் மகாநந்தீஸ்வரர். இவரையாரும் தொட்டுப் பூஜை செய்யலாம்.

## நலகோண்டா நந்தி :

ஆந்திராவில் நலகொண்டாவட்டத்தில் உள்ள சோமண்ணா கோயிலில் ஒரு அழகான நந்தி உள்ளது. கல்லை வெண்ணையாக்கி அதில் செதுக்கியுள்ளதுபோல சிற்பிகள் மிக அழகாக இதை உருவாக்கியிருக்கிறார்கள். இந்நந்தியில் நம் முகம் தெரியும்படி அவ்வளவு பளபளப்பாக இருக்கிறது. இதன் கழுத்திலுள்ள சங்கிலி மூக்கணாங்கயிறு கண்டாமணி எல்லாமே நிஜம்

போலத் தோன்றுகின்றன. ராமப்பாகோயில் நந்தியும் இதைப் போலவே நல்ல கருப்புக்கல்லில் அமைக்கப்பட்டுள்ளது.

### வாரங்கல் நந்தி :

வாரங்கல் அருகில் ஹனும்கொண்டா என்ற இடத்தில் மும் மூர்த்திகளுக்கான ஆலயம் உள்ளது காகதீயமன்னர்கள் கட்டிய இந்த ஆலயத்தில் மூன்று நந்திகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு அளவு. இதன் சிற்ப வேலைகளை இன்று முழுவதும் பார்த்துக்கொண்டிருக்கலாம்.

### லேபாக்ஷி நந்தி :

ஆந்திராவில் மிகப் பெரிய நந்தி லேபாக்ஷி நந்திதான். இது ஒரே கல்லில் உருவானது. உயரம் 15 அடி. நீளம் 27 அடி. இதிலும் சிற்பவேலைகள் மிகப் பிரமாதமாகச்செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள இறைவன் வீரபத்திரர்.

ஆந்திராவில் எல்லா சிவ ஆலயங்களிலும் நந்தி இருக்கின்றன. ஆந்திரர்கள் மகாசிவபக்தர்கள். தங்கள் குழந்தைகளைப் படிக்கவைக்கும்போது 'ஹரி ஓம்' என்று அவர்கள் சொல்லிக்கொடுப்பதில்லை. 'சிவாய நம' என்றே சொல்லிக்கொடுக்கிறார்கள்.

### நந்திமலை :

பங்களூருக்கு 31 மைல் வடக்கில் அமைந்துள்ள மலைக்கு நந்தியின் பெயரே வைக்கப்பட்டுள்ளது. அங்கு மலைமீதுள்ள கோயிலிலும் அடிவாரத்திலுள்ள கோயிலிலும் இடம் பெற்றுள்ள ஈசுவரனுக்கு நந்தீசுவரர் என்றே பெயர். கீழேயுள்ளவர் போக நந்தீசுவரர். மேலேயுள்ளவர் யோக நந்தீசுவரர். யோகத்தைக் கைக்கொண்டால் மேலும் மேலும் உன்னதநிலையை அடையலாம் என்பதைக் குறிப்பிடுவதுபோல் இக்கோயில்களின் பெயர்கள் அமைந்துள்ளன.

மலையின்மீது ஒரு பிரும்மாண்டமான நந்திஉருவம் உள்ளது. கன்னடக்காரர்கள் நந்தியை பஸவணா அல்லது பஸவப்பா என்றே அழைக்கிறார்கள். இந்த நந்திக்கு நெல்லிக்காய் பஸவப்பா என்று பெயர். நந்திக்கு எதிரில் ஒரு நெல்லிமரம் இருப்பது இப்பெயர் ஏற்படக் காரணமாக இருக்கலாம்.

மைசூர் மாவட்ட நந்தி எல்லாமே உருவத்தில் பெரியவை களே.

## நஞ்சன்கோடு அலங்கார நந்தி :

நஞ்சன்கோடு ( மைசூர் ) ஆலயத்தில் நுழைந்ததும் நம்மை எதிர்கொண்டழைப்பதுபோல நந்தி இறைவனை நோக்காமல் பிரதான சந்நிதிக்குக் கொஞ்சம் வடபக்கமாய் இருக்கும். இதனை அலங்கார நந்தி என்கின்றனர். கருங்கல்லில் அழகே உருவாக அமைந்தது.

ஆலகால விஷத்தை உண்ட சிவனைக் காப்பதற்காகவே இவர் இப்படிகாவலாக நிற்கிருராம். இந்தச்சிவனுக்கு சிறப்பான நைவேத்தியம் சுகண்டித சக்கரை – அதாவது சுக்கு சக்கரை வெண்ணெய் மூன்றும் கலந்தது.

## சாமுண்டி நந்தி :

மைசூரில் சாமுண்டேசுவரிதேவி கோயில் கொண்டிருக்கும் மலைவழியில் ஒரு பிரும்மாண்டமான அழகேஉருவான நந்தியைத் தரிசிக்கலாம். இது மலைமீது நடந்து ஏறும்வழியில் இருக்கிறது. காரில் வந்துவிட்டுத்திரும்பினுல் இந்த நந்தி கண்ணில் படாது.

## பஸவன்குடி நந்தி :

கன்னடக்காரர்கள் நந்திதேவரைப் பஸவேஸ்வரர் என்று அழைக்கிருர்கள். பங்களூரில் சுற்றுப்புறத்திலுள்ள ஒரு குடியிருப்புக்கே "பஸவன்குடி" என்ற பெயரும் இட்டிருக்கிருர்கள்.

இங்கு மிகப்பிரும்மாண்டமான நந்தி இருக்கிறது. இதுஒரே கல்லால் ஆனது. 10 அடி உயரம், 15 அடி நீளம். இதன் கீழ் கன்னட பாஷையில் ஒரு கல்வெட்டு உள்ளது. விருஷபாவதி நதி இங்கு ஆரம்பித்து மேற்கு நோக்கிப் பாய்கிறது என்று எழுதப்பட்டுள்ளது. அருகில் ஒருஆறு உள்ளது; அதற்குபெயர் அர்க்காவதியே யொழிய விருஷபாவதிஅல்ல. இந்த நதி கங்கணஹல்லிக்கு வடக்கில் சிலமைல் தூரத்தில் உள்ளது.

இந்த நந்திஆலயத்தில் கார்த்திகை மாதத்தில் கடலைக்காய் விழா என்று ஒரு விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதற்கு கூட்டம் ஏராளமாக வருகிறது. வேர்க்கடலை பட்டாணி வாங்கி நந்திக்கு நிவேதனம் செய்கிருர்கள். பங்களூர் நகரை ஏற்படுத்திய கெம்பகௌடா 500 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்த விழாவாம் இது.

### கேரளத்தில் :

எட்டமானூர் மகாதேவர் ஆலயம் கேரளத்தில் மிகப் பழமையானது. இக்கோவிலில் இரு ரிடப வடிவங்கள் உள்ளன. ஒன்று கல்லாலானது. மற்றொன்று வெண்கல உலோகத்தாலானது. வயிற்றுவலியால் அவதிப்பட்ட ஒரு அரசன் அந்நோய் இறைவன் அருளால் நீக்கப்பட்டதன் காணிக்கையாக இந்த ரிடபம் முழுதும் நெல்லால் நிரப்பி 1545ல் அளித்ததாக வரலாறு கூறுகிறது. இன்னும் இந்த ரிடபத்தினுள் இருக்கும் தானியத்தில் ஒன்றை எடுத்து உண்டால் வயிற்றுவலி நீங்கி விடுகிறது என்ற நம்பிக்கை இருந்துவருகிறது. கேரளாவில் குழித்துறையிலிருந்து ஒன்பது மைலிலுள்ளது திருப்பரப்பு மகாதேவர் ஆலயம். இங்கு நதி வடக்குப்புறம் ஒரு ஓரமாக அமைந்துள்ளது. இங்குள்ள மூலவர் இறைவனின் அம்சமான வீரபத்திரர். இவர் கோபத்தின் உச்ச நிலையில் இருந்ததால் நந்தி இவர் முன்னால் இருக்க முடியாமல் வடக்கு நோக்கி ஒதுங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

### வடநாட்டில் ;

நேபாளத்திலுள்ள பசுபதிநாதர் ஆலயத்தில் நான்கு பக்கமும் நான்கு வாயில்கள். மேற்குவாயில் முன் பெரிய நந்தி உள்ளது. மேல் நோக்கிய முகத்துடன் அமைந்துள்ள இந்த நந்திக்குப் பொன் முலாமிட்ட தகடு போர்த்தப்பட்டுள்ளது. ஒரு இடத்தில் நின்ற நிலையில் அதிகார நந்தி காட்சி தருகிறார்.

ஜோதிர்லிங்கத் தலமான ஓம்காரத்தில் நந்தி வாயிலில் எப்பொழுதும் ஜலம் வந்துகொண்டிருக்கிறது.

### காசியில் நந்தி இல்லை :

காசியிலும் நாசிக்கிலுள்ள காபாலேசுவரத்திலும் சிவலிங்கம் எதிரில் நந்தி கிடையாது.

சிவபெருமான் பிரும்மாவின் தலையொன்றைக் கொய்ததாக ஒருவரலாறு உண்டு. இதனால் ஏற்பட்ட பாபத்தை நீக்க அவர் பூலோகத்திற்கு வந்தார். நாசிக் ராம்குண்டத்தில் அவர் ஸ்நானம் செய்து வெளிவந்தபோது நந்திதேவர் அவருக்கு குருவைப்போல விளங்கினாராம். ஆகவே நீ வேலைக்காரன் போல என் எதிரில் இருப்பது முறையன்றுஎன்று சிவபெருமான் கூறினாராம். ஆனால் காசியில்ஏன் நந்தி இல்லை என்பது ஆராய வேண்டிய விஷயம்.

( தொடரும் )

# சனிக்கு ஒரு தனிக்கோயில்

திரு. என். இராமகிருஷ்ண

சனிபகவானைக்கண்டு அஞ்சாதவர் யார்? அஞ்சாநெஞ்சம் படைத்தவர்களுங்கூட சனிபகவான் என்றால் கொஞ்சம் தயங்குவார்கள். சனிதெசை, சனிபுத்தி என்று தெரிந்தவுடன் திருக்கோயிலுக்குச் சென்று சனிபகவான் தம்மைப் பிடிக்காமல் விட வேண்டும் என்று பிரார்த்தனை செய்பவர்கள் இந்தநாட்டில் அநேகர். நவக்கிரகங்களில் மிகவும் சக்தி வாய்ந்தவர் சனி பகவான்; பல கோவில்களில் நவக்கிரகங்கள் இருக்கின்றன. சில கோயில்களில் தனியே அவருக்குச் சந்நிதி இருக்கும். திருநள்ளாற்றில் சனிபகவானுக்குத் தனிக்கோயில் இருக்கிறது. அங்கு அவருக்கு அலங்காரங்கள் வைபவங்களெல்லாம் சிறப்பாக நடைபெறும். மற்றக் கிரகங்களின் தொந்தரவு இங்கே கிடையாது என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

"சனியைப்போலக் கொடுப்பவரும் இல்லை; கெடுப்பவரும் இல்லை" என்பது பழமொழி. அவ்வளவு சக்தி வாய்ந்த சனி பகவானைத் திருப்திசெய்யும் வாய்ப்பு மக்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கின்றது. திருநள்ளாற்றில் அவர் இவ் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் தேதி மிதுன ராசியிலிருந்து கடக ராசிக்குப் பெயர்கின்றார். இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்படி சனிப் பெயர்ச்சி வருகின்றது. இந்தசமயத்தில் நாட்டில் பல பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திருநள்ளாற்றுக்கு வருவார்கள். சனிப் பெயர்ச்சியின்போது தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றுவார்கள்.

திருநள்ளாறு சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. முசுகுந்த சக்கரவர்த்திக்கு தேவேந்திரன் பரிசளிக்க எண்ணி 'யாது வேண்டும்' என்று கேட்க, முசுகுந்தன் இந்திரனுடைய பூசா மூர்த்தியைக் கேட்டான். தன் ஆன்மார்த்த மூர்த்தியைக் கொடுக்க மனமில்லாமல் இந்திரன் தெய்வச் சிற்பியைக்கொண்டு

குறிப்பு :— சனிப் பெயர்ச்சி 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் தேதி (ஆவணிமாதம் 2 ஆம் தேதி) இரவு 11 மணிக்கு.

புதியனவாக ஆறு மூர்த்திகளைச் செய்வித்து இம்மூர்த்திகளில் எதுவேண்டுமோ அதை எடுத்துக்கொள் என்ளுன். அம் மன்னவன் மூலமூர்த்தியை அடையாளம்கண்டுகாட்டி ' அதையே வேண்டும்" என்று கேட்டான். இந்திரன் யாவற்றையுமே பரிசாக அளித்தான். திருவாரூரில் மூல மூர்த்தியையும், திரு நள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காருயில், திருக்கோளிலி, திருவாய்மூர் திருமறைக்காடு ஆகிய ஆறு தலங்களில் மற்ற மூர்த்தி களையும் பிரதிஷ்டை செய்தான். திருநள்ளாற்றில் உள்ள விடங்கருக்கு "நகவிடங்கர்" என்று பெயர். நடனம் உன்மத்த நடனம்.

ஆதியில் இவ்வூருக்கு தர்ப்பாரண்யம் என்பது பெயர். தல விருட்சம் தருப்பை ஆதலால் இப்பெயர் வழங்குகின்றது. நக விடங்கரைப் பிரதிஷ்டை செய்ததனுல் நகவிடங்கபுரம் என்று பெயர் ஏற்பட்டது. நளன் வழிபட்டதனுல் நளேச்சரம் என்றும் பெயர் உண்டு. நளனுக்கு நன்னெறிகாட்டிய தலமாதலால் நள்ளாறு என்று பெயர்பெற்றது. திருநள்ளாறு என்று வழங்கப் பெறுகிறது.

இவ்வூரின் நடுவில் அமைந்திருக்கின்றது கோயில். கிழக்கில் இராஜகோபுரம் இருக்கிறது; இறைவன் சந்நிதி நேர் எதிரில் இருக்கிறது. அம்பிகை தெற்குநோக்கி எழுந்தருளியுள்ளாள். சனிபகவான் சந்நிதி கிழக்குநோக்கியது. கர்பக்கிரகத்துக்குத் தென்புறம் உள்ள மண்டபத்தில் நகவிடங்கத் தியாகராஜர் நீலோத்பலாம்பிகையுடன் எழுந்தருளியுள்ளார். இறைவன் திருநாமம் தர்ப்பாரண்யேசுவரர். அம்பிகை திருநாமம் போகமார்த்த பூண்முலையாள். சனிபகவான் சிறப்பு மூர்த்தி. இங்கு நவக்கிர கங்களில் மற்ற கிரகங்கள் இல்லை.

பிரம்மதீர்த்தம், வாணிதீர்த்தம், அன்னதீர்த்தம், அகத்திய தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் இருந்தபோதிலும் நளதீர்த்தம் மிகவும் சிறப்புவாய்ந்தது. இதில் மூழ்கினுல் எல்லாப்பிடைகளும் கிரகதோஷமும் நிவர்த்தியாகும் என்பார்கள். பக்கத்திலுள்ளது நளகூபம் என்னும் கிணறு. நளமகாராஜனுக்காக காசியில் உள்ள கங்கையை இறைவன் இங்கு வரவழைத்தான். இதில் மக்கள் குளிப்பதில்லை. தீர்த்தத்தைத் தலையில் மட்டும் தெளித்துக் கொள்கின்ருர்கள்.

நளமகாராஜனுடைய கதையை அறியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. தேவர்கள் தமயந்தியை மணக்க நினைத்து அவமானம் அடைந்தபோது, சனிபகவானின் துணைகொண்டு அவனைத் துன்புறுத்தினர். சனியால் பிடிக்கப்பட்ட நளன் முடிவில் தர்ப்பாரண்யம் அடைந்து இறைவனை வழிபட்டதும்

சனிபகவான் அவனைவிட்டு அகன்றார். நளன் நீராடிய குளமே நளதீர்த்தம் என்று வழங்குகின்றது. நளன் இறைவனைக்கேட்டுக் கொண்டபடி சனிபகவான் இத்தலத்தில் எழுந்தருளியிருந்து யாவருக்கும் பீடையிலிருந்தும் துன்பத்திலிருந்தும் நிவிர்த்தி அளிக்கின்றார். ஆகையால் சனிபகவான் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்குப் பிரவேசிக்கும் காலத்தில் எண்ணற்ற மக்கள் இந்தக் கோயிலுக்குவந்து நளதீர்த்தத்தில் எண்ணெய்முழுக்கிட்டு சனிபகவான் சந்நிதியில் நல்லெண்ணெய் தீபம் இட்டு வழிபாடுசெய்து நற்பேறுபெறுகின்றனர்.

இத்தலத்தில் கலிங்கநாட்டு மன்னனுக்குப் பாபவிமோசனமும் வேதியர்களுக்கு கோஹத்தி தோஷமும், அக்னி வண்ணருக்கு முக்தியும் ஏற்பட்டனவாம் இறைவன் முதன் முதலில் "மிருத்யுஞ்சய மந்திரத்தை" இந்தத்தலத்தில் உபதேசித்ததாகக் கூறுகின்றார்கள்

பாண்டிய நாட்டில் அந்தக்காலத்தில் சமண சமயம் வலுத்திருந்தது. கூன்பாண்டியன் சமணரைச்சார்ந்தான். ஆனால் அவன் மனைவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவநெறி நின்றனர் திருஞானசம்பந்தர் சீகாழியில் இறையருள் பெற்றமையைக் கேள்வியுற்று அவரைப் பாண்டிய நாட்டுக்கு அரசி அழைத்தாள்; அதுகண்டு பொறாமைகொண்ட அமணர்கள் அவர் தங்கி இருந்த மடத்துக்குத் தீயிட்டனர். இதைக் கண்ட திருஞானசம்பந்தர் இந்த "வெப்பு அரசனுக்கு நோயாகவேண்டும்" என்று பதிகம் பாடினார், அரசன் சுரநோயால் துன்புற்றான்; அமணரும், சம்பந்தரும் அரசன் பிணியைத்தீர்க்கத் தலைப்பட்டனர். அமணர்கள் தோல்வியுற்றனர் திருஞானசம்பந்தர் திருநீற்றுப் பதிகம்பாடி அரசனின் பிணியைத் தீர்த்தார்.

பிறகு சமணர்கள் திருஞானசம்பந்தரை வாதுக்கு அழைத்தார்கள். மந்திரத்தை ஏட்டில் எழுதி தீயில் இடவேண்டும் என்பதும், யாருடையஏடு வேகாது இருக்கிறதோ அவரேவெற்றி பெற்றவர் என்பதும் நிபந்தனை. திருஞானசம்பந்தர் தாம் முன் பாடிய திருமுறையை வணங்கி கயிறு சாத்திப் பார்த்தபோது இந்தத் திருநள்ளாற்றுப்பாசுரம் 'போகமார்த்த பூண்முலையாள்" என்பது கிடைத்தது அதைத் தீயில் இட அது வேகாமல் பசுமையாகக் காட்சி அளித்தது அதனால் அந்தப் பதிகத்துக்கு "பச்சைப் பதிகம்" என்று பெயர் வழங்கலாயிற்று. இதனால் சைவ சமயம் உயிர் பெற்றது. நள்ளாற்று அம்பிகைக்கு "பிராணேசுவரி" என்ற பெயர் ஏற்பட்டது.

இத்தலத்துக்குத் திருநாவுக்கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகங்களும், அருணகிரிநாதர் பாடிய திருப்புகழும் உள்ளன.

திருநள்ளாறு தேவஸ்தானம் ஒரு கமிட்டியாரால் பரிபாலிக்கப்படுகின்றது. இந்தத் தேவஸ்தானத்தில் தருமையாதீனத்துக்குள்ள உரிமையின்படி தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் பிரதிநிதியாக ஆதீனக் கட்டளைத் தம்பிரான் ஒருவர் கட்டளை விசாரணையாக இருப்பார். உள்துறை நிர்வாகம் இவர்களுடையது. தற்போது, வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் கட்டளை விசாரணையாக இருக்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்குமுன் மக்களின் ஒத்துழைப்பால் சனி பகவானுக்குத்தங்கக்கவசம் அணிவித்தார்கள். கோடி அர்ச்சனையும் நடைபெற்றது. சனிபகவான் வாகனம் காகம். வெள்ளிக் காக்கை வாகனம் ஒன்றுஉள்ளது தங்கக் காக வாகனம் செய்ய முயற்சிகள் நடைபெறுகின்றன.

தல விருட்சமான தருப்பையை கருப்பக்கிரகத்திற்கு வெளியில் பயிர் செய்துள்ளார்கள் இந்தக் கோயிலுக்கு வருபவர்கள் இதில் ஒரு முடிச்சுப்போட்டுச் செல்கின்றனர் தருப்பையில் முடிச்சிட்டால் தங்கள் துன்பங்கள் கட்டுப்படும் என்பது ஐதீகம். கோயில் சுவர்களில் நளன் சரித்திரம் ஓவியமாக எழுதப்பட்டுள்ளது வைகாசிமாதம் 18 நாட்கள் பிரமோற்சவம் நடைபெறும். முடிவில் "இடையனுக்கு மோட்சம்" அளிக்கும் ஐதீகம் நடக்கின்றது. சனிப் பெயர்ச்சியின்போது நளதீர்த்தத்தை மின் விளக்குகளால் அலங்கரிப்பர். கோயிலில் லட்சக்கணக்கான அகல்கள் சுடர்விட்டு எரியும் அவற்றில் சிறு எள் முடிச்சுகளைப் போடுவார்கள். சனிபகவானைத் தரிசனம் செய்வது கடினம். பல மணி நேரம் "கியூ" வரிசையில் வரவேண்டும்.

தேவஸ்தானத்தில் ஒரு சுற்றுலாமாளிகை கட்டியுள்ளார்கள். சாதாரண நாட்களில் சனிபகவானை நிம்மதியாகத் தரிசனம் செய்யலாம்.

வழி :—மாயூரம்-பேரளம்-காரைக்கால்வழியில் திருநள்ளாறு செல்ல புகைவண்டி வசதி உண்டு. பஸ் வழியாகச் சென்றால் சுலபமாகச் செல்லலாம். மாயூரம் கும்பகோணம் பொறையார், நாகப்பட்டினம் முதலிய இடங்களிலிருந்து பஸ் வசதி உண்டு. சென்னையிலிருந்து திருநள்ளாறு 325 கிலோமீட்டர். மாயூரம் முதலிய இடங்களிலிருந்து 35 கிலோமீட்டர்

# தருமையாதீனத்தில்

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

( மலர் 34, இதழ் 7 பக்கம் 296 இன் தொடர்ச்சி )

[ திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில் மகோற்சவம் 21—5—75 முதல் பத்து நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. அதையொட்டி நிகழ்ந்த திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள் கீழே தரப்படுகின்றன. ]

இரண்டாம் திருநாள் வழக்காடு மன்றமாக 22—5—75 மாலை தொடங்கியது. விழுப்புரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருக்குறள் திரு வீ முனுசாமி பி ஏ., பி. எல்., அவர்கள் நடுவராக அமர்ந்தார்கள். வழக்காடு மன்றத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆண்டவனைப் பணிகொண்டமை பெருமைக்கு உரியது அன்று என்ற வழக்கு முன்வைக்கப்பெற்றது. சங்கிலியாரைத் திருவொற்றியூரில் மணந்ததும், பரவையாரிடம் இறைவனைத் தூதுபோக்கியதும் அடியார் இலக்கணத்திற்குக் குறைபாடுடையது எனத் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புலவர், திரு இரா. செல்வக்கணபதி பி. ஏ., அவர்கள் வழக்குத் தொடுத்தார்கள்.

நால்வகை மார்க்கத்தில் சகமார்க்கமாகிய தோழமை நெறியைச் சுந்தரர் மேற்கொண்டவர் ஆதலாலும், ஏயர்கோன் கலிக்காமரிடம் ‘சுந்தரரின் செயல்கள் தமக்கு உகப்பே’ என ஆண்டவன் விளக்கியிருப்பதனாலும், சுந்தரரின் செயல்கள் குறையுடையன அல்லவென எதிர்வழக்கிட்டார் காரைக்கால் புலவர் திரு. கோ. சாரங்கபாணி அவர்கள். நடுவர் அவர்கள் இருதிறத்து வாதங்களையும் சீர்தூக்கி, தமது முடிவாக சைவ சமய சம்பிரதாயங்களை மேற்கோள்காட்டி, சுந்தரர் செயல்கள் பெருமைக்கு உரியனவே எனத் தீர்ப்புரைத்தார்கள்.

23—5—75 வெள்ளிக்கிழமை மாலை மூன்றும்நாள் நிகழ்ச்சிப் பட்டிமன்றமாகத் தொடங்கிற்று மாயூரம், வழக்கறைஞர், திரு. இரா. இராஜசேகரன் பி எஸ். சி., பி. எல்., அவர்கள் நடுவராக அமர்ந்தார்கள் சேக்கிழார் விரித்த வழிவழி வரலாற்றில் ஆண்டவன் அடியவர்களைத் தேடி வருகின்றானா? அல்லது அடியவர்கள் ஆண்டவனைத்தேடிச் செல்கின்றனரா? என்பது பட்டிமன்றத்தின் பொருளாக அமைந்தது. அடியார்கள் பக்தியால் - அன்பால் ஆண்டவனை மண்ணுலகுக்கு ஈர்த்த பெருமையே பெரியபுராணத்தின் உள்ளீடு என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர், புலவர் திரு. க. அறிவொளி எம். ஏ., அவர்களும், அவர்களது அணியில், தருமபுரம்,

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர், புலவர், திரு. வே. கண்ணப்பன் அவர்களும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை வித்துவான், திருமதி. ப. நீலா பி. ஏ., அவர்களும் வாதிட்டனர்.

உயிர்கள் ஆண்டவனை நாடிச் சென்று அவன் திருவடிகளை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டன. எனவே, தகுதி வாய்ந்த உயிர்கள் ஆண்டவன் திருவடிக்குத் தொடங்கிய பயணமே பெரியபுராண உள்ளீடு என புத்தனம்பட்டி நேரு நினைவுக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு அ. வ. இராஜ கோபாலன் எம். ஏ., பி. டி., அவர்களும், அவர்களைத்தொடர்ந்து பூம்புகார் பேரவைக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திரு. ஆ. ஜெகந்நாதன் எம். ஏ., அவர்களும், மாயூரம் மகளிர் அரசினர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், புலவர், செல்வி. ரா. மீனாட்சிசுந்தரம் அவர்களும் வாதிட்டனர். நடுவர் அவர்கள் இருதிறத்து வாதங்களையும் சீர்தூக்கித் தீர்ப்புரைத்தார்கள்.

24—5—75 சனிக்கிழமை மாலை நான்காம் திருநாள் " தெளிவு குருவின் " என்று தொடங்கும் திருமந்திரப் பாடலுக்குத் தனித் தனியே உரைகாணும் உரையரங்கம் தொடங்கியது. சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் பதிவாளர், மும்மொழிக் கொண்டல், திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை எம். ஏ., பி. டி., அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்" என்ற முதல் அடிக்குத் தருமையாதீனப்புலவர், திருமுறை ஆராய்ச்சிக்கலைஞர், திரு. க. வெள்ளைவாரணனார் அவர்களும், ' தெளிவு குருவின் திருநாமம் செப்பல்" என்ற இரண்டாம் அடிக்குத் தருமை யாதீனப் புலவர், திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., அவர்களும், "தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்" என்ற மூன்றாம் அடிக்குத் தருமையாதீனப்புலவர், திரு. க. வச்சிரவேலு முதலியார் பி ஏ., எல். டி., அவர்களும், "தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே" என்ற இறுதி அடிக்குத் தருமையாதீனப்புலவர், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும் ஆழ்ந்த சாத்திர தோத்திரப் புலமை நோக்கில் நுண்ணுரை கண்டனர்.

ஐந்தாம் திருநாள் 25-5-75 ஞாயிறு மாலை 6-30மணி அள வில் கவியரங்கமாகத் தொடங்கிற்று. திருவானைக்கா, கவிஞர். திரு. கலைவாணன் அவர்கள் வழங்கிய சிறப்புக்கவிதைக்குப்பின் தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாற்றில் வில்வாரண்யம், (தருமையின் முன்னைத்திருப்பெயர்) ...

குருநாதனைத்தேடி ... ... உபதேசங்கள், ... ... கண்ணுக்கினிய பொருள் என்னும் தலைப்புக்களில் கவிஞர்கள் திரு. அ. கலிய பெருமாள் எம். ஏ., திரு. மா. வே. பசுபதி, திரு. தா. ம. வெள்ளை வாரணம், தருமையாதீனப் புலவர், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச்டி. ஆகியோர் கவிதை வழங்கினர் இரவு 10-00 மணி அளவில் சென்னை குமாரி. கௌரி குழுவினரின் " அன்னை அபிராமி " என்னும் இன்னிசைக் கதை சிறப்பாக நிகழ்ந்தேறியது.

வழக்காடுமன்றமாக ஆறுந்திருநாள் 26-5-75 திங்கள் மாலை தொடங்கியது. சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்., அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். 'கந்தபுராண வரலாற்றில் சூரபதுமன் குற்றவாளி' என்ற பொருள் குறித்து நடைபெற்ற வழக்காடு மன்றத்திற்கு மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் திரு. தி. வ. காந்திமதிநாதன் பி. ஏ., (ஆனர்சு) அவர்கள் நடுவராக அமர்ந்து வழக்காராய்ந்தார்கள். திரு. இரா. செல்வக் கணபதி பி. ஏ., சூரபதுமன் குற்றவாளியே என்று வழக்குத் தொடுத்தார். மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர். திரு. அ. கலியபெருமாள் எம். ஏ. சூரபதுமன்குற்றவாளி அல்லன் என எதிர்வழக்கிட்டார். நடுவர் சூரபதுமன் குற்றவாளியே எனத்தீர்ப்புரைக்க வழக்காடுமன்றம் இனிதே நிறைவெய்திற்று.

ஸ்ரீ ஞானம்பிகை உடனுறை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கல்யாணத் திருநாளாக ஏழாந்திருநாள் 27-5-75 செவ்வாய் மாலை கொண்டாடப்பெற்றது. திருக்கல்யாண வைபவத்திற்குப் பின் மேலைக்கோவில் அலங்கார மண்டபத்தின்முன்னர் திகழ்ந்த அழகிய மணப்பந்தலில் தருமையாதீன வேத சிவாகம பாடசாலை ஆசிரியர் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் 'திருக்கல்யாண தத்துவம்' என்பது பற்றி உரையாற்றினார்கள். 9-00 மணி அளவில் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில், மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினரால் 'பார்வதி திருமணம்' என்னும் பொம்மலாட்ட நிகழ்ச்சி நடத்தப்பெற்றது.

தமிழ்நாடு மேலவைத் துணைத்தலைவர், சிலம்புச்செல்வர் மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் எட்டாந்திருநாளன் 28—5—75 புதன்கிழமை மாலை 7-00 மணி அளவில் பட்டிமன்றமாகத் தொடங்கியது: மூவர் தேவார வரலாற்று அற்புதங்களின் அடிப்படை ஆண்டவன் அருள்

விளக்கமா ? அடியவர் பெருமை விளக்கமா ? என்பது பட்டி மன்றத்தின் பொருளாக அமைந்தது. ஆண்டவன் அருள் விளக்கமே என்ற அணியில் திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ., திரு. இரா. செல்வக்கணபதி பி ஏ., புலவர். திரு. வே. கண்ணப்பன் ஆகியோர் வாதிட்டனர். அடியவர் பெருமை விளக்கமே என்ற அணியில் திரு. அ. கலியபெருமாள் எம். ஏ., திரு. அ. மெய்ப்பொருள் எம். ஏ., வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் முதலியோர் வாதிட்டனர். நடுவர் அடியவர் பெருமை விளக்கமே என்று தீர்ப்புக்கூறினார்கள்.

ஒன்பதாந் திருநாள் கவியரங்கமாக 29—5—75 வியாழக் கிழமை மாலை 7 மணி அளவில், திருச்சிராப்பள்ளி, செந்தமிழ்க் கவிதைச் செம்மல், கவிதாமணி, திரு. சு. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் சிறப்புக் கவிதையோடு தொடங்கிற்று. "சைவத்தின் மேற்சமயம் வேறிலை" என்ற தொடர் உண்மையை மூர்த்தி, தலம், தீர்த்தம், தத்துவம் என்ற நான்கு நிலைகளில் விளக்கும் வாயிலாகப் பாவலர், திரு. ச. பாலசுந்தரம், கவிஞர். திரு. தொல்காப்பியன், டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச்டி., புலவர். திரு இரா. செல்வக்கணபதி பி. ஏ., முதலியோர் முறையே தத்தம் கவிதைகளை வழங்கினர்.

பத்தாந்திருநாள் - குருபூஜைத் திருநாளாக 30—5–75 வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் கருத்தரங்கமாகக் கூடியது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் சிறப்புரையாற்றினார்கள். வடலூர், வள்ளலார் குருகுலம், தவத்திரு ஊரன் அடிகள் அவர்கள் "சொக்கநாத வெண்பா" என்பதுபற்றியும், தருமையாதீனப் புலவர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "சிவபோகசாரம்" என்பதுபற்றியும் உரையாற்றினர்.

அன்றிரவு 9 மணி அளவில் நடைபெற்ற இலக்கிய விழாவில் சென்னை, கலைமகள் ஆசிரியர், திரு. கி. வா. ஜகந்நாதன் எம் ஏ., அவர்கள் "குருபக்தி" என்பதுபற்றி உரையாற்றினார்கள். சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி, மாண்புமிகு. திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். இரவு 10-30 மணி அளவில் தருமையாதீனப் பண்ணிசைப்புலவர், கலைமாமணி, திரு. பி. சுவாமிநாதன் அவர்கள் "தருமையாதீனக் குருபரம்பரை" என்னும் தலைப்பில் நாமாவளி பஜனை நிகழ்த்தினார்கள்.

31—5—75 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் பட்டணப் பிரவேசத் திருநாள் – கருத்தரங்கம் தொடங்கிற்று. சென்னை, தென்மண்டல வானொலி நிலைய நிகழ்ச்சி அமைப்பாளர், திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் சிறப்புரைக்குப்பின்னர், திருச்சி, திருக்குறள்வேள், திரு. ஜி. வரதராஜபிள்ளை பி ஏ., அவர்கள் “குருவழிபாடு” பற்றியும், மதுரகவி, வித்துவான், திரு. தா. குருசாமி அவர்கள் “இலிங்க வழிபாடு” பற்றியும், திருவாரூர், வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள் “சங்கம வழிபாடு” பற்றியும் உரையாற்றினர்.

அன்று மாலை 6 மணி அளவில் சமயப் பயிற்சி வகுப்பு நிறைவு விழா நடைபெற்றது. சிதம்பரம், அறப்பணிச்செல்வர், டாக்டர் திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை எம். பி., பி எல்., அவர்கள் சிறப்புரை ஆற்றிப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்கள். மாயூரம் வழக்குரைஞர் திரு. ஆர். இராஜசேகரன் பி. எஸ்சி., பி, எல்., அவர்கள் “குருஞானசம்பந்தர்” என்ற பொருளிலும், குடந்தை பண்ணாராய்ச்சி வித்தகர், திரு. ப. சுந்தரேசனார் அவர்கள் “திருஞானசம்பந்தர்” என்னும் பொருள்பற்றியும் உரையாற்றினர். இரவு 7-30 மணிக்கு, தருமையாதீன இசைப்புலவர், சீகாழி திரு எஸ். கோவிந்தராஜன் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

---

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தாறாவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் இராட்சச ஆண்டு ஆவணித்திங்கள் 19ஆம் நாள் (4—9—75) வியாழக்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று ஆச்சாள்புரம், ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மை உடனுறை ஸ்ரீசிவலோகத்தியாகராஜசுவாமி திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெறும். “ஆச்சாள்புரத் திருப்பதிகம்” என்ற நூல் வழங்கப்பெறுவதுடன் தலத் தேவாரத் திருப்பதிகப் பாராயணமும், விளக்கவுரையும் நிகழ்த்தப் பெறும். பக்தர்கள் வந்து வழிபட்டுப் பயன் பெறுவார்களாக.

---

# செய்திகள்

## தருமையாதீனத்தில்
## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜைவிழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் சைவ சமயாசாரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. சமயாசாரியர்களுக்கு அன்று காலை விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இரவு ஆதீன ஓதுவாமூர்த்திகளின் திருவாசக பாராயணத்துடன் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் புறப்பாடு நிகழ்ந்தது. மாலை 7 மணி அளவில் தருமையாதீனப் புலவர், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி எச்டி., அவர்களும், தருமையாதீனப் புலவர், திரு. வி சபேசன் அவர்களும் முறையே திருக்கோவையார் திருவாசகம் என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபட்டு அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கியருளினார்கள்.

## திருச்சி ஸ்ரீ தாயுமானேசுவரவர் திருக்கோயிலில்
## உருத்திராபிஷேகம்

திருச்சியிலுள்ள ஸ்ரீ தாயுமானேசுவரர் திருக்கோயிலில் 27—7—75 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை ஸ்ரீ தாயுமானவருக்கு உருத்திராபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இங்கு உருத்திர ஜபத்துடன் உருத்திராபிஷேகம் இருபத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. அறங்காவலர்களும், சிவாசாரியப் பெருமக்களும், திருச்சி நகரப் பெருமக்களும் பெரும் பங்கு கொண்டு விடாமுயற்சியுடன் இவ்வபிஷேகத்தைச் செய்துவருகின்றனர் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவாக இவ்வாண்டு இவ்வபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது இதன் நினைவாக இப்பெருமானுக்கு ஆராதனை செய்ய வெள்ளியினாலாகிய சோடசோபசார சாமான்கள் செய்துவைக்கப் பெற்றுள்ளன. உருத்திராபிஷேகத் தரிசனத்திற்கு, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். தருமையாதீனம் மௌன மடம் கட்டளையில், கட்டளை விசாரணையாக உள்ள வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான்

சுவாமிகளும், மற்றும் பணியாளர்களும், ஸ்ரீ தாயுமானேசுவரர் ஆலய அறங்காவலர்களும், திருச்சிநகரப் பெருமக்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைப் பூர்ணகும்ப மரியாதைகளுடன் வரவேற்றனர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ மட்டுவார்குழலம்மை உடனாகிய ஸ்ரீ தாயுமானேசுவரருக்கு நண்பகலில் நிகழ்ந்த ருத்ராபிஷேக தரிசனம் செய்து மகிழ்ந்தார்கள். இரவு வழிபாட்டின்போது ஆராதனைக்காகப் புதிதாகச் செய்யப்பெற்ற சோடசோபசார சாமான்களைத் தம் திருக்கரத்தால் ஆராதனைக்கு வழங்கியருளினார்கள். வழிபாட்டிற்குப்பின்னர் ருத்திராபிஷேகம் செய்வது நாட்டிற்கும் சமயத்திற்கும் மக்களுக்கும் நன்மைதருவதாகும். இவ்வபிஷேகம் இங்கு இருபத்தைந்து ஆண்டுகளாகச் செய்யப்பெறுவது பாராட்டிற்குரியது. மேலும் பெருமானின் ஆராதனைக்குத் தேவைப்படும் சாமான்கள் வெள்ளியினால் செய்து அளிக்கப்பெறுவது இவ்வூர்ப் பெருமக்களின் பக்தியைப் புலப்படுத்துவது என்று ஆசியருளினார்கள் (ஆசியுரை அடுத்த இதழில் வெளிவரும்) பொதுமக்கள் பலர் கூடியிருந்து வழிபட்டுப் பிரசாதம் பெற்றும் ஆசியுரையைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தருமையாதீனத்திற்குச் சொந்தமான உய்யக்கொண்டான் (கற்குடி) ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபட்டு தருமைக்கு மீண்டருளினார்கள்.

## தெய்வீகப் பேரவை மாநாடு

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை மாநாடு 30—7—75 புதன் கிழமை மாலை கும்பகோணம் ஸ்ரீ கும்பேசுவரசுவாமி திருக்கோயில் மண்டபத்தில் சிறப்பாக நிகழ்ந்தது. அன்று மாலை தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயில் வழிபாட்டிற்குப்பின்னர் அவ்வாலய ஆஸ்தான மண்டபத்தில் பேரவைத் தலைவர் தேர்வு நிகழ்ந்தது. அதில் தமிழ் நாட்டில் உள்ள ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களும், மடாதிபதிகளும் ஆக ஒன்பதுபேர் கலந்துகொண்டனர் தற்பொழுது பேரவைத்தலைவராக உள்ள திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகளையே (குன்றக்குடி அடிகளார்) மீண்டும் மூன்று ஆண்டிற்குப் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

அடுத்து கும்பகோணத்தில் நிகழ்ந்த பேரவைக்கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் எழுந்தருளினார்கள். கும்பகோணம் உச்சிப்பிள்ளையார் கோயிலில் பூர்ண கும்ப மரியாதைகளுடன் வரவேற்பு அளிக்கப்பெற்றது. விநாயகர் வழிபாட்டிற்குப் பின்னர், எழுபிடிகள், யானை, நாதசுர இன்னிசை முதலியவற்றுடனும் வாணவேடிக்கைகளுடனும் ஸ்ரீ கும்பேசுவரர் சுவாமி திருக்கோயிலுக்கு வலமாக அழைத்துச் சென்றார்கள். அங்கு அலங்கார மண்டபத்தில் மாநாடு நிகழ்ந்தது. கும்பகோணம் நகராட்சித் தலைவரும், தஞ்சை மாவட்டப் பேரவைத் தலைவரும் ஆகிய திரு C. P. இராமதாஸ் அவர்கள் இந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுசெய்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் முதலியவர்களை வரவேற்றுப் பேசினார்கள். பேரவை சார்பில் வரவேற்புரைகள் வாசித்து அளிக்கப்பெற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துக்கு ஒரு வரவேற்புரை படித்தளித்தனர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் மற்றும் நகரப் பெருமக்களும் பேரவையின் பணியினைப் பாராட்டிப் பேசினார்கள். நாட்டில் சமய நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக இப்பேரவை தொடங்கப்பெற்றது. இதனால் பிற சமயத்தில் உள்ளதுபோல் இந்து மதத்தில் சமய நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்படும் நிறுவனம் இல்லாது இருந்த குறை நீங்கியது. இப்பேரவை நாடு முழுவதும் பல கிளை நிறுவனங்களுடன் நன்கு செயல்பட்டுவருகிறது. ஆங்காங்குள்ள சிறுவர்களும் பொதுமக்களும் இவ்வமைப்பின் மூலம் சமயத்தில் நல்ல ஈடுபாடுகாட்டி சமயத்தை வளர்த்துவருகின்றார்கள் என்று பாராட்டிப் பேசினார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் ஆசி வழங்கியருளினார்கள். ஆசியுரை இவ்விதழில் தனியே தரப்பெற்றுள்ளது

பிற மதங்களிலிருந்து மதமாற்றம்பெற விரும்புவோர் இந்து மதத்தில் இப்போதுள்ள சட்ட நடைமுறைகளை எளிதாக்கி இப்பேரவையின் அங்கீகாரம் பெற்றாலே போதுமென்று சட்டத்தில் மாறுதல் செய்யவேண்டுமென்றும் இப்பேரவை ஒரு தனி நிறுவனமாக இருப்பதைச் சட்டபூர்வமான நிறுவனமாக ஆக்கத் தக்க நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், பராதீனமான ஆலய நிலங்களை மீட்பதற்கு நீதிமன்றங்கள் மூலம் நடவடிக்கைகள் எடுப்பதில் வீண் செலவினங்களும் காலதாமதமும் ஏற்படுவதைத் தவிர்த்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரே முடிவுசெய்யத்தக்கதாக எளிதாக்கப்

படவேண்டும் என்றும், ஆலயங்களின் நிலக் குத்தகைகளை குடிகளிடமிருந்து வசூலிப்பதற்காக உள்ள சட்ட பூர்வமான அதிகாரங்கள் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய இலாகா அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டால் ஆலய வருவாய்களைக் காலத்தில் பெற வாய்ப்பு ஏற்படும் என்றும் அதற்குத் தக்க முறையில் சட்டத்தில் திருத்தங்கள் செய்யவேண்டும் என்றும் இவைபோன்ற சில தீர்மானங்களும் பேரவையில் நிறைவேற்றப்பெற்றன.

## தருமையாதீனத் திருக்கோயில்களில் இலட்சார்ச்சனை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் உலக நலங்கருதி – பசியும் பிணியும் வறுமையும் நீங்கி, வசியும் வளனும் வண்மையும் சுரக்க, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இலட்சார்ச்சனை செய்யத் திருவுளம் பற்றியவாறு ஆடித்திங்கள் 2 ஆம் நாள் (18—7—75) வெள்ளிக்கிழமை முதல் தொடங்கி சுவாமிக்கும் அம்பாளுக்கும் இலட்சார்ச்சனை நடைபெறுகிறது. அர்ச்சனை ஆடித்திங்கள் 30 ஆம் நாள் வெள்ளிக்கிழமை நிறைவுபெறும். வேளூர் ஸ்ரீவைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீவைத்தியநாதப்பெருமானுக்கும் ஸ்ரீ தையல்நாயகிக்கும் இலட்சார்ச்சனை நடைபெறுகிறது. திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அபிராமி அம்மைக்கும் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமிக்கும், ஸ்ரீ காலசம்கார மூர்த்திக்கும் இலட்சார்ச்சனை செய்யப்பெறுகிறது. திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீஉலகநாயகிக்கும் ஸ்ரீலக்ஷ்மிபுரீசுவரருக்கும் இலட்சார்ச்சனை நடைபெறுகிறது திருவிளநகர் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார்சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தோழியம்மைக்கும் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார்சுவாமிக்கும் இலட்சார்ச்சனை நிகழ்த்தப்பெறுகிறது. சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருநிலை நாயகிக்கும், ஸ்ரீ பிரமபுரீசுவரருக்கும் லட்சார்ச்சனை நிகழ்கிறது. திருக்கடவூர், திருவிளநகர் ஆகிய தலங்களுக்கு வெள்ளிக்கிழமைகளிலும், திருநின்றியூர் ஸ்ரீலக்ஷ்மிபுரீசுவரர் திருக்கோயிலுக்கு சோமவார நாட்களிலும் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான் திருக்கோயிலுக்கு செவ்வாய்க்கிழமைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். ஆங்காங்குள்ள அன்பர்களும் வெளியூர் பக்தர்களும் அர்ச்சனையில் பங்குகொண்டு பிரசாதம் பெற்று உய்ந்தனர்.

## ஆடிப்பூரத் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ தையல்நாயகி உடனுகிய ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்திலும், சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்திலும் திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் உடனுகிய ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்திலும் 31—7—75 முதல் பத்து நாட்கள் ஆடிப்பூரத் திருநாள் சிறப்பாக நடைபெற்றது. 8—8—75 வெள்ளிக்கிழமையன்று திருத்தேர்த் திருவிழாவும், 9—8—75 அன்று தீர்த்தம் கொடுத்தருளலும் சிறப்புற நிகழ்ந்தன. பக்தர்கள் பலர் வழிபட்டு அம்பிகையின் அருளுக்கு உரியவரானுர்கள்

### சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

## மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு, மகாலிங்கபுரம் ஸ்ரீ நவநீத செல்வ விநாயகர் ஆலயத்தில் 27—7—75 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் நடைபெற்றது. ஸ்ரீ விநாயகருக்கும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமிக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் அர்ச்சனையும், ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி, ஸ்ரீ துர்க்காம்பிகை, ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ நவக்கிரகங்கள் ஆகிய மூர்த்திகளுக்கு அர்ச்சனையும் நடைபெற்றன. நிலையத் திருமுறை ஆசிரியர் திரு. S. ஞானப்பிரகாசம், வித்துவான். திரு. N. இராமலிங்கம், திரு N. இராமமூர்த்தி அய்யர் முதலியோர் திருமுறைப் பாடல்களையும், விநாயகர் அகவல், முருகன் பிள்ளைத்தமிழ் முதலியவற்றையும் பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப் பின்னர் நிகழ்ந்த சமயப் பிரசாரக் கூட்டத்தில் திரு. M. R. தாமோதரன் அவர்கள் அனைவரையும் வரவேற்ருர்கள். திரு. செல்வநடராஜ முதலியார் அவர்கள் தலைமை ஏற்று கூட்டு வழிபாட்டின் நன்மைகளை எடுத்து விளக்கினுர்கள். தொடர்ந்து திரு. N. பழனியப்பன், திரு. V. N. ஆறுமுகம். திரு. R. சிவஞானம் செட்டியார், புலவர், திரு. K ஆறுமுகம் ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர். புலவர் திரு T. கேசவன் அவர்கள் நன்றி நவின்ருர்கள். ஆலய நிர்வாகக் கமிட்டியின் தலைவர், திரு. மணி அய்யர் அவர்கள் வழிபாடு நன்முறையில் நிகழ உடனிருந்து உதவினுர்கள்.

# எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஆசிரியர்,

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( ஸ்ரீஇராக்ஷஸஹு ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய )

( 17—8—75 முதல் 16—9—75 முடிய )

இராட்சஸஹு ஆவணிமீ 1உ பானுவாரம் மூல நக்ஷத்திரத்தில் சூரிய உதயம் முதல் 19 நாழிகை 28 விநாடிக்கு விருச்சிக லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரியபகவான் சிம்ம ராசி சங்கிரமணமாக ஆவணிமாதப் பிரவேசம் செய்கிறார். ஸ்ரீ சூரிய பகவான் சேனாபதியாகிறார். மேற்படிமாதப் பிரவேசகால பலன் பருவமழை விருத்தியும், சுபிட்ச சூசனையும், விலைவாசிகள் குறைவும் ஏற்படும். பிரஜைகள் தொழில் வளம் பெருக்கி நேர்மை வாழ்க்கை நடத்துவர். திருமடங்கள், ஆச்சாரிய பீடங்கள் ஓங்கும். தேவாலயங்கள் மடாலயங்களின் கர்த்தாக்களால் லோகோபகாரவிழா நிகழ்ச்சிகள் நடத்தவும், எங்கும்சிவாச்சாரம் பரவவும், திருக்கூட்டங்கள் பல ஏற்படவும் ஸ்ரீ சூரிய பகவான் சங்கிரம லக்கினத்துக்குப் பத்திலிருந்துக்கொண்டு அனுக்கிரகம் செய்துவருவார்.

## சனிப் பெயர்ச்சி

இராட்சஸஹு ஆவணிமீ 2உ 42 நாழிகை 48 விநாடிக்கு மேஷ லக்கினத்தில் சனி பகவான் மிதுன ராசியிலிருந்து கடக ராசியில் பெயர்ச்சியடைகிறார். மிதுனம், கடகம், சிம்ம ராசிகளுக்கு முறையே பாத, ஜன்ம, விரய ஆதிக்கமும், தனுசு, மகர ராசிகளுக்கு அஷ்டம, சப்தம ஆதிக்கமும் ஏற்படும். இதற்கு சனிப்பிரீதி செய்துக்கொள்ள நலம் தரும். கன்றுடன் காராம் பசு தானம் செய்ய அல்லல் தீரும். ஜன்ம நக்ஷத்திரத்தில் கால் படி காரெள் தானம் செய்யவேண்டும். எல்லா இராசிகளுக்கும் சனிவாரத்தில் சனீஸ்வரன் சந்நிதியில் திலதீபம் ஏற்றி பிரார்த்திக்க நலம் தரும்.

**1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼**
**( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ – அ. )**

மேஷராசி ஒன்பது பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். அவசியமான செலவுகள் அதிகமாக இருக்கும். ஜீவனோபாய தொழில் விஷயத்தில் வேலை சுமந்து கஷ்டம் அதிக முயற்சியினாலும் தெய்வ பலத்தாலும் எல்லாக் காரியங்களும் நடக்கும். சகோதரர், புத்திரர், புத்திரிகளுக்கு சிறுசர்ச்சையுடன் சுபங்கள் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½**
**( இ. உ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ. )**

ரிஷபராசி ஒன்பது பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத் தரும். ஜீவன விஷயத்தில் நன்மை ஏற்படும். குடும்ப நலம் பெருகும். தனம் வேண்டுங்காலத்தில் தோதாக வரும். பந்துமித்திரர் வருகையும் உபசரணையும் நடக்கும். ஓர் தர்மகாரிய செலவை உண்டுபண்ணும். முயன்ற காரியங்களில் ஜெயம் ஏற்படும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾**
**( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )**

மிதுனராசி ஒன்பது பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரமான பலனைத்தரும். தனம் வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். ஜீவன விஷயத்தில் தடையும் அனுகூலமும் கலந்து இருக்கும். எதிர்பார்த்திருந்த பொருள் கைவசப்படும். புத்திரோற்பத்தி ஏற்படும். பித்தாதிக்கத்தால் நலிவும் தெய்வானுக்கிரகத்தால் நீங்குவதும் ஆகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்**
**( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )**

கடகராசி ஒன்பது பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபமான பலனைத்தரும். கல்வி விருத்தியாகும். சிவந்த வஸ்து பிராப்தி ஏற்படும். எல்லாவிதத்திலும் ஆதாயம் இருந்துவரும். பூமி விருத்தியாகும். விவசாயத் தொழில் சிறக்கும். புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் செல்லுவதும் சுவாமிதரிசனமும் கிடைக்கும். பூர்வபொருள் வரவில் சிக்கலான நிலைமையும் தெய்வபலத்தால் வரவும் ஆகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼**
**( ம. மி. மு. மெ. – மோ. டா. டி. டு. – டே. )**

சிம்மராசி ஒன்பது பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரமான பலனைத்தரும். தனம் வரவும் செலவும் சரிசமமாக

இருக்கும். ஜீவன விஷயத்தில் அடிக்கடி அலேச்சல் தரும். எல்லாக்காரியங்களும் தெய்வ பலத்தால் வெற்றிகரமாக நடந்து வரும். இம்மாதம் 7௳ க்குமேல் ஓர் நூதனமான பொருள் வாங்கநேரும். மேலோர் பெரியோர் அன்பும் ஆசியும் கிடைக்கும். புத்திரருக்கு மேன்மைஸ்திதி ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி– உத்திரம் பின் ¾ – ஹஸ்தம் – சித்திரை முன் ½
( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்னியாராசி ஒன்பது பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபமான பலனேத்தரும். புத்திரர்களுக்கு மேன்மை உண்டாகும். ரோகம் நிவர்த்தியாகும். தனம் பாக்கியம் விருத்தியாகும். கடன் சுமை தீரும். ஜீவன விஷயத்தில் இருந்த சிரமம் நீங்கும். எண்ணிய காரியங்கள் நிறைவேறும். விடு மனேவிஷயத்தில் உள்ள சிக்கல் நீங்க வழிதுறை ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾
( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி ஒன்பது பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபமான பலனுக நடக்கும். ஆரோக்கியம் உண்டாகும். படிப்பு விருத்தியாகும். மூன்றுவித ஆதாய பிராப்தியை உண்டுபண்ணும். தனக்கும் தன்னேச் சேர்ந்தவர்களுக்கும் வேண்டிய நன்மைகளெல்லாம் தெய்வானுக்கிரகத்தால் ஏற்படும். ஸ்திரசொத்தில் ஓர் மாறுதலும் ஏற்படும். சுபம் பெருகும். வெள்ளி, சனி சுபமாகும்.

8. விருச்சிகம் ¼ - அனுஷம் – கேட்டை.
( தோ. – ந. நி. நு. நெ. - நோ. ய. யி. யு )

விருச்சிகராசி ஒன்பது பாதங்களும், எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனுக நடக்கும். தேகநலன் அசதியாக இருக்கும். குடும்பநலம், பணவசதி சீராக இருந்துவரும். தெய்வபலத்தால் விசேஷமான காரியங்களெல்லாம் சிறப்பாக நடந்துவரும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அர்ச்சனேசெய்ய சர்ச்சையான சம்பவங்கள் விலகி அமைதி உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼
( யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே. )

தனுர்ராசி ஒன்பது பாதங்களும், எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனுக நடக்கும், தனவசதி சீராகவும் குடும்பத்தில் சில

அல்லல் பிரச்சனைகளாகவும் இருக்கும். சகலமான காரியங்களி லும் தடையும் கால தாமதமுமாக இருந்துவரும். இருப்பிடத்தில் சிரமம் காட்டும். தாம்பத்திய வாழ்க்கையில் தொழில் பிரச்சினை யில் சர்ச்சைவந்து சமாதானம் ஆகும். ஸ்ரீ சனீசுவரனுக்கு பிரீதி செய்ய நலம் உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – க. கீ.)

மகரராசி ஒன்பது பாதங்களும், எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரபலனை நடக்கும். சகலமான காரியங்களிலும் சர்ச்சை யுடன் சுபமும் ஏற்படும். இருப்பிடத்தில் சிலரால் இடஞ்சல் உண்டாகும். உடலில் வாயு உபத்திரவம் இருந்துகொண் டிருக்கும். ஸ்ரீ சனீசுவரனுக்கு திலதீபம்போட சகலமான அல்லல்களும் நீங்கச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி–¾

(கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. தா)

கும்பராசி ஒன்பது பாதங்களும், எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். தனம் குடும்பம் இவற்றில் திருப்திகரமான நிலைமையாக இருந்துவரும். ரோகம் நிவர்த்தியாகும். இருணங் கள் தீரும். சத்துரு ஜெயத்தைக்கொடுக்கும். தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். புத்திரர் புத்திரிகள் தேகநல னுடன் இருப்பார்கள். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய எல்லாக்காரியங் களிலும் நன்மை உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

(தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி ஒன்பது பாதங்களும், எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். தனம் பாக்கியம் விருத்தியாகும். ஜீவன விஷயத்தில் மேன்மை ஸ்திதியை உண்டுபண்ணும். எல்லாக் காரியங்களையும் சாதிக்கமுடியும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். அரசாங்கத்தில் நன்மை ஏற்படும். வித்துவத் துறையில் பிரபலத்தைக் கொடுக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.